மலர் - 27/ இதழ் -05 / மே 2026
Volume -27/ Issue - 05 / May 2026
தமிழ் மாத இதழ் / தனிப்பிரதி ரூ.20/-
Tamil Monthly/ Per Copy Rs.20/-

# வளரும் விண்ணரசு
## VALARUM VINNARASU



**அறுப்பு மிகுதி;**
**வேலையாட்களோ கொஞ்சம்...**
லூக்கா 10:2

# பொதுச்சேவகரிடமிருந்து...



கிறிஸ்துவுக்குள் அன்பான வளரும் விண்ணரசு வாசக சகோதர சகோதரிகளுக்கு,

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் நல்வாழ்த்துக்கள்!

பரிசுத்த வேதாகமத்தில் சங்கீதக் காரனாகிய தாவீது கூறியதுபோல, “வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று. அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது” (சங்கீதம் 118:22-23).

மேற்கண்ட வசனத்தின்படி, கர்த்தர் என்னையும், அவரது பணி செய்ய **ICGM**இல் இணைத்து, மிகப்பெரிய பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார். இந்தப் பொறுப்பைச் செய்வதற்குத் தேவையான ஞானம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசைக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

தூய வெள்ளியன்று, சென்னை-பெருமாட்டுநல்லூரிலுள்ள ஈசிஜ திருச்சபையில் , நானும், என் மனைவியும் தேவனுடைய வார்த்தைகளைப் பகிர்ந்து கொண்டோம். இந்தத் திருச்சபையின் ஆயர் அருள்திரு.திலீப் ஜெபக்குமார் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஏப்ரல் 5ஆம் தேதியன்று மேடவாக்கம்-வெள்ளைக்கல் சாரோன் அசெம்பிளி திருச்சபையில் தேவவார்த்தையையும், **ICGM** அருட்பணி குறித்த செய்திகளையும் பகிர்ந்து கொண்டேன். இந்த ஆலயத்தின் போதகர் எப்பிராயிம் அவர்களுக்கு நன்றி.

ஏப்ரல் 11ஆம் தேதியன்று **TELC** (மேற்கு தாம்பரம்) திருச்சபையில் தேவவார்த்தையையும், **ICGM** பணித்தள செய்திகளையும் பகிர்ந்து கொண்டேன். இத்திருச்சபையின் ஆயர் அருள்திரு. டேவிட் தினகரன் அவர்களுக்கு நன்றி.



சிவினி கிராமத்தில் ஆலயக்கட்டுமானப்பணி நடைபெறவுள்ள இடம்.



ஆலயக்கட்டுமானப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் குருஸ்நார் கிராமம்.



கல்வராயன்மலை ஆலயக்கட்டுமானப்பணி விரைவாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஏப்ரல் 19ஆம் தேதியன்று, சென்னை-கொருக்குப்பேட்டையிலுள்ள கல்வாரி தேவசபையின் மாலை ஆராதனையில், கர்த்தருடைய வார்த்தையையும், **ICGM** பணித்தள செய்திகளையும் பகிர்ந்து கொண்டேன்.

தொடர்ச்சி கடைசிப்பக்கம் பார்க்க...

நிறுவனர்
டாக்டர். N.J. ஞானையா

ஆசிரியர் குழு:

அருள்திரு.G. பொன்னுராஜ்
அருள்திரு. இம்மானுவேல் பாண்டி
திரு. இரா. பாலசுப்பிரமணியன்
திருமதி. ரேணுகா பிரின்ஸ்

ஆண்டுச் சந்தா:₹200/- ஆயுள் சந்தா:₹1500/-

வளரும் விண்ணரசு

நமது இந்தியாவில் உள்ள எல்லா மக்கள் கூட்டத்தினரையும், இயேசுவின் சீடர்களாக்க பாரம் கொண்ட, இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷினின் (ICGM) துதி–ஜெபக் குறிப்புகளையும், ஆண்டவர் இயேசுவின் பிள்ளைகளாகவும், அவரது சீடர்களாகவும் விரும்புபவர்கள் அவரை அறியும் அறிவில் வளரத் தேவையான படைப்புகளையும் மாதந்தோறும் உங்களுக்குக் கொண்டு வருகிறது.

## இதழின் உள்ளே...

| | |
|---|---|
| மறக்க முடியாத அருட்தொண்டர் | 04 |
| அருட்செய்தி! | 05 |
| ஏப்ரல் மாத வேத விடைகள் | 08 |
| சிங்கக்குகையில் ஜெபிக்க வா! | 09 |
| துதித்து மன்றாடுவோம்! | 12 |
| வேதாகமத்தின் பக்கங்களிலே | 30 |
| பெண்கள் பகுதி | 33 |
| சரியான விடை எழுதியவர்கள் | 36 |
| வேத வினாக்கள் | 37 |
| நடப்புச் செய்திகள் | 38 |

**ICGM**
**58/1 முத்தாலம்மன் கோயில் தெரு,**
**சேலையூர், சென்னை- 600 073.**
அலைபேசி : 94459 24440
ICGM Land Line: (044)2229 1045
contacticgm@gmail.com

வளரும் விண்ணரசு இதழுக்கு சந்தா அனுப்புபவர்கள் கீழ்க்கண்ட வங்கிக்கணக்குக்கு அனுப்பி 94459 24440 என்ற எண்ணிற்கு அனுப்பிய விபரங்களை தெரிவியுங்கள்.

A/C NAME: IRAI ARASU TRUST, BANK NAME: STATE BANK OF INDIA
A/C NUMBER: 10143136762, IFSC CODE: SBIN0002235

# இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன்

**ICGM**

**தரிசனம்: (Vision Statement)**

நமது இந்திய நாட்டின் அனைத்து மாநிலங்களில் வாழும் ஒவ்வொரு மக்கள் கூட்டத்திலும் சாட்சியுள்ள சுயசார்புள்ள திருச்சபைகள்.

**வேத ஆதாரம்: (வெளி.7:9)**

“இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன்.”

**செயல்திட்டம்: (Mission Statement)**

இயேசு கிறிஸ்துவின் சீடர்களாகிய நாம், இந்தியாவில் நற்செய்தி சென்றடையாத, தேவன் வழிநடத்துகிற மக்கள் கூட்டங்களுக்கு, நற்செய்தியைப் பிரசங்கித்து, அவர்களை சீடர்களாக்கி, சாட்சியுள்ள சுயசார்புள்ள திருச்சபைகளை உருவாக்குகின்ற நோக்கத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

**வேத ஆதாரம்: (மத்தேயு 28:19-20)**

ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.

# ஜான் டி பிரிட்டோ

(1647 -1693)





போர்ச்சுக்கல் நாட்டில் 1647ஆம் ஆண்டு, மார்ச் 1ஆம் தேதி பிறந்தவர், ஜான் டி பிரிட்டோ. 11ஆம் வயதில் நோய் வாய்ப்பட்டு, மரணத் தருவாயில் இருக்கையில், அவருடைய அம்மா அவரை ஆண்டவர் பணிக்கு ஒப்புக்கொடுத்து, மன்றா டினார்களாம்.

அம்மாவின் ஜெபத் திற்குப் பதிலளித்த ஆண்டவர், அவரைச் சுகமாக்கினார். தனது 15ஆம் வயதிலேயே, இறையியல் படிக்கச் சென்ற அவருக்கு, இந்தியா சென்று நற்செய்தி அறி விக்க வேண்டும் என்னும் தாகமும், வாஞ்சையும் வந்தன.

தனது 27ஆம் வயதில்- 1674இல் இந்தியாவுக்கு வந்த அவர் தன் பணியை, "மறவர் நாடு" என்றழைக்கப்பட்ட இராம நாதபுரம் மாவட்டத்தில் தொடங்கினார். தனக்கு முன் பணியாற்றிய ராபர்ட் டி நொபிலியின் (தத்துவ போதகர்) ஊழிய முறைகள் அவரைக் கவர்ந்தன.

முதலில் தமிழ் மொழியை நன்கு கற்றார். தன் உடைகளை தமிழ் மக்கள் மதிக்கும் ஒரு துறவி (சந்நியாசி) போல் அணிந்தார். அத்துடன் தன் பெயரையும் அருளானந்தர் என்று மாற்றிக்கொண்டார்.

உணவு முறைகளிலும் நொபிலி போலவே மாமிச உணவை நிறுத்தி விட்டு, காய்கறி உணவு மட்டுமே சாப்பிட ஆரம்பித்தார். அது கறி சாப்பிடாத மக்களிடம் நல்ல வரவேற் பைக்கொடுத்தது.

முதல் பத்து ஆண்டுகளில் ஊர் ஊராகச் சென்று நற்செய்தி அறிவித்ததால் ஏராளமான மக்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டனர்.

இதை அறிந்த இராமநாதபுரம் அரசர் (சேதுபதி) அவரையும் அவருடன் உழைத்த மற்ற சிலரையும் கைது செய்து சிறையில் அடைத்துவைத்துக் கொடுமைப்படுத்தினார். பின்னர், அவர் அந்த நாட்டில் ஊழியம் செய்யக் கூடாது என்றும் கட்டளையிட்டார்.

அந்தச் சூழ்நிலையில் அவர் திரும்ப போர்ச்சுக்கல் சென்றார். சில ஆண்டுகள் இந்தியாவின் தேவையைச் சொல்லி அங்குள்ள இளைஞர்களுக்கு அறைகூவல் விடுத்தார். அதன் விளைவாக 24 புதிய அருட்பணியாளர்களுடன் 1690இல் இந்தியா திரும்பி வந்தார்.

அரசருக்குத் தெரியாமல் பணிசெய்ய வேண்டிய சூழ்நிலை யில், இரவு நேரங்களில் பயணம் செய்து, நற்செய்தி அறிவித்தார்.

அவருடைய ஊழியத்தால், அந்த வட்டாரத்திற்குத் தலைவராய் இருந்த, தடியன் என்னும் இளவரசர், இயேசுவை ஏற்றுக் கொண்டார். அவருக்குச் சில மனைவிகள் இருந்தனர். கிறிஸ்தவரானவுடன், முதல் மனைவியை மட்டும் வைத்துக் கொண்டு, மற்றவர்களை அவர்கள் வீடுகளுக்கு அனுப்பிவிட்டார்.

அப்படி அனுப்பப்பட்டவர்களில் இராமநாதபுரம் சேதுபதியின் தங்கை மகளும் ஒருவர். அதனால், கோபமடைந்த சேதுபதி, ஜான் பிரிட்டோவைக் கைது செய்தார். அவர் பணியாற்றிய ஓரியூர் என்னும் ஊரிலேயே அவரை வெட்டிக்கொல்லும்படி ஆணையிட்டார்.

1693ஆம் ஆண்டு, பெப்ரவரி 4ஆம் நாள், தனது 46ஆம் வயதில் ஓரியூரில் வெட்டப்பட்டு, ஆண்டவருக்காக இரத்தச் சாட்சியாய் இறந்தார். ஆனால், அதன் விளைவாக நற்செய்தி தீவிரமாகப்பரவத் தொடங்கியது.

நூற்றுக்கணக்கான இராமநாதபுர மாவட்ட மக்கள், இயேசுவை ஏற்றுக்கொண்டனர். "கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும்; செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும்" (யோவான் 12:24) என்னும் இயேசுவின் வசனப்படி, ஜான் டி பிரிட்டோவின் மரணம் மிகுந்த பலனைக் கொடுத்தது.

இந்தியாவின் "யோவான் ஸ்நானகன்" என்று அழைக்கப்படும் அருளானந்தர் என்னும் ஜான் பிரிட்டோவை, நாம் மறக்க முடியாது.



அருட்செய்தி

# அறுப்பு மிகுதி; வேலையாட்களோ கொஞ்சம்

Rev.S. டேவிட் சாலமோன்

ஊழியம் செய்வதற்காக, இயேசு கிறிஸ்து 70 சீடர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களை தமக்கு முன்பாக அனுப்புகிறார். (லூக்கா 10:1-7) இது ஒரு வரலாற்றுச் சம்பவம் மட்டுமல்ல-இன்றுவரைத் தொடரும் ஓர் உன்னதப் பணியாகும்.

இந்தப் பகுதி நமக்கு அழைப்பு, அவசரம், தேவனைச் சார்ந்திருத்தல் மற்றும் உண்மையான ஊழியத்தின் இயல்பு ஆகியவற்றைக் கற்பிக்கிறது. இயேசுவின் சீடர்கள் ஒவ்வொருவரும் இந்தப் பணிக்கு அழைக்கப்பட்டவர்களே.

**அழைப்பு - அறுவடை மிகுதியானது**

(லூக்கா 10:1-2)

இயேசு சீடர்களை ஊழியத்திற்கு அனுப்பும்போது, இரண்டு இரண்டு பேராக அனுப்புகிறார். ஏன் அவ்வாறு இயேசு அனுப்புகிறார்?

1. ஊழியம் திட்டமிடப்பட்டதாக இருக்க வேண்டும்.
2. நாம் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும்.
3.அறுவடை (ஆத்துமாக்கள்) ஏற்கெனவே தயார் நிலையில் இருக்கிறது. ஆனால், வேலைக் காரர்கள் குறைவாக உள்ளனர்.

முதன்முதலாக பாப்பா வலசு என்ற கிராமத்திற்கு ஊழியம் செய்ய இயக்கத்தின் மூலமாக அனுப்பப்பட்டேன். நற்செய்தியை அவர்களுக்குக் அறிவித்தபோது, தேவன் அவர்கள் உள்ளத்தில் கிரியை செய்ய ஆரம்பித்தார்.

அநேக மக்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார்கள். சில மாதங்களில் அங்கு ஒரு சிறிய சபை உதயமானது. இப்போது அங்கு ஒரு ஆலயம் கட்டப்பட்டு, ஆராதனை நடைபெற்று வருகிறது.

**ஜெபத்தின் முக்கியம் - அறுவடையின் ஆண்டவரை வேண்டிக் கொள்ளுங்கள்** (வ.2)

ஊழியம் என்பது ஜெபத்திலிருந்து ஆரம்பமாகிறது. "அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசித்துக் கொண் டிருக்கிறபோது; பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்திற்கு பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார். அப்பொழுது உபவாசித்து ஜெபம் பண்ணி, அவர்கள் மேல் கைகளை வைத்து அவர்களை அனுப்பினார்கள்." (அப்.13:3).

தேவன் அறுவடையின் ஆண்டவரா யிருக்கிறபடியினாலே, இன்றைக்கும் ஊழியர்கள் அவரால் அனுப்பப்படுகிறார்கள்.

ஜெபம் நம்மை தேவனுடைய சித்தத்துடன் இணைக்கிறது. எந்தவொரு சபை ஜெப நேரத்தை அதிகப்படுத்துகிறதோ, அந்த சபை வளர்ந்து பெருகும். உயிருள்ள சபையாக உருமாறும்.

நாம் வேலை செய்யும்போது நாமே வேலை செய்கிறோம்!

நாம் ஜெபிக்கும்போது, தேவன் செயல்படுகிறார்! என்பது எவ்வளவு பெரிய உண்மை..

வட இந்தியாவிலுள்ள ஒரு கிராமத்திலுள்ள விசுவாசிகள், தங்களுக்கு ஒரு ஊழியக்காரரை அனுப்பும் என்று, பல ஆண்டுகளாக தொடர்ந்து ஜெபித்து வந்தனர்.

ஒருநாள் தேவனால் வழிநடத்தப்பட்ட ஒரு ஊழியக்காரர் அங்கே வந்தார். அவர்களுடைய ஜெபத்திற்கான பதிலும் கிடைத்தது. திருச்சபையும் வளர ஆரம்பித்தது.

**ஊழியத்தின் விலைக்கிரையம் - ஓநாய் களுக்குள் ஆட்டுக்குட்டிகள் போல** (வ.3)

"புறப்பட்டுப் போங்கள்; ஆட்டுக் குட்டிகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறது போல, இதோ, நான் உங்களை அனுப் புகிறேன்." (லூக்கா 10:3).

ஊழியம் செய்வதென்பது எளிதான காரியமல்ல. ஆகவே, எதிர்ப்பு இருக்கும்-நிராகரிப்பு இருக்கும்-ஆன்மீக போராட்டம் இருக்கும்.

பவுலும் பர்னபாவும் இணைந்து, லிக்கவோனியா நாட்டிலுள்ள பட்டணமாகிய

லீஸ்தீராவுக்கு சென்றனர். அங்கே, சுவிசேஷத்தை பிரசங்கம் செய்யும்போது, பிறவி சப்பாணியாயிருந்த ஒருவன் வசனத்தை கேட்டுக் கொண்டிருந்தான். "பவுல் அவனை உற்றுப் பார்த்து, இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் அவனுக்கு உண்டென்று கண்டு; நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்து நில் என்று சொன்னார்." அவனுக்கு அற்புதம் நடைபெற்றது.

பர்னபாவை யூப்பித்தர் என்றும், பவுலை மெர்க்கூரி என்றும் பாராட்டினர். அந்த பட்டணத்தின் மக்கள் பூமாலைகளையும் கொண்டு வந்து, பலியிடவும் ஆயத்தமானார்கள். அதை இருவரும் கேள்விப்பட்டு வஸ்திரங்களைக் கிழித்து நாங்களும் உங்களைப் போல பாடுள்ள மனுஷர்தானே என்று சொல்லி இயேசுவையே ஜீவனுள்ள தேவன் என்று சொல்லி பிரசங்கித்தனர்.

சில யூதர்கள் அந்தியோகியாவிலும், இக்கோனியாவிலிருந்து வந்து, தவறுதலாக போதனை செய்து, பவுலை கல்லெறிந்து, அவர் மரித்துப் போனாரென்று எண்ணி, அவரைப் பட்டணத்துக்கு வெளியே இழுத்துக் கொண்டு போட்டனர். இந்நிலையில், சீடர்கள் வந்து அவருக்கு உதவி செய்தனர்.

மறுநாளிலே பர்னபாவும், பவுலும் தெர்பைக்கு சென்று பிரசங்கம் பண்ணினார்கள். இருவருக்கும் எதிர்ப்புகள், நெருக்கடிகள் மற்றும் நிராகரிப்புகள் வந்தன. எல்லா போராட்டங்களையும் தாண்டி ஊழியத்தை நிறுத்தாதபடி நிறைவேற்றி முடித்தனர். (அப்.14:8-20).

ஊழியத்திற்கான விலைக்கிரயம் என்பது, துணிவும், தாழ்மையுமாகும்.

**தேவனைச் சார்ந்திருத்தல் - பையை எடுத்துக் கொள்ளாதீர்கள்.** (வ.4)

இயேசு அவர்களுக்கு எதையும் எடுத்துக் கொள்ள வேண்டாம் என்றார். இயேசு ஏன் இப்படிச் சொன்னாரென்றால், தேவனிடத்தில் முழு நம்பிக்கை கொண்டு ஊழியம் செய்கிற அனுபவம் வேண்டுமென்பதற்காகவே.

"உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்." (நீதி.3:5-6).

இந்த வசனம், தேவனை முழுமையாக நம்பி, நம்முடைய அறிவை விட, அவர்மேல் சார்ந்திருக்கும் நம்பிக்கை வேண்டும் என்று சொல்கிறது. எந்தவொரு காரியமானாலும் தேவனிடம் கேட்டு செய்யும்போது, ஊழியத்திலே நல்ல பலனைக் காண முடியும்.

சங்கீதக்காரனாகிய தாவீது கூறும்போது, "உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப் பண்ணுவார்." என்று கூறுகிறார். (சங்கீதம் 37:5).

நம்முடைய வாழ்க்கையை தேவனிடம் முழுமையாக ஒப்படைக்கும்போது, அவர் செயல்படுகிறவராயிருக்கிறார். "கர்த்தர்மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்" (எரேமியா 17:7). தேவனை சார்ந்திருப்பவன் பாக்கியவான் என்று எரேமியா தீர்க்கர் கூறுகிறார்.

தேவனைச் சார்ந்திருப்பது என்பது நம்முடைய பலத்தால் அல்ல; அவருடைய பெலத்தினால் வாழ்வது, தேவனை நம்புகிறவன் ஒருபோதும் தோற்க மாட்டான்.

ஜார்ஜ் முல்லர் (1805-1898) ஒரு மகத்தான கிறிஸ்தவ ஊழியர். அவர் ஆயிரக்கணக்கான அனாதை குழந்தைகளை பராமரித்து வந்தார். ஆனால், அவரது வாழ்க்கையின் சிறப்பு என்னவென்றால், அவர் ஒருபோதும், மனிதர்களிடம் பணம் கேட்டதில்லை.

எல்லாவற்றையும் தேவனிடம் ஜெபித்தே பெற்றுக் கொண்டார். ஒருநாள் காலை, அனாதை இல்லக் குழந்தைகளுக்கு உணவு கொடுக்க போதுமான பணமில்லை-பொருளும் இல்லை.

ஆனால், ஜார்ஜ் முல்லர் கலங்கவில்லை. குழந்தைகளை சாப்பாட்டு மேஜை முன்னர் உட்கார வைத்து, "இன்றைய உணவுக்காக தேவனுக்கு நன்றி" என்று கூறி ஜெபித்தார்.

அந்த நேரத்தில் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. ஒரு பேக்கரி உரிமையாளர் நின்று கொண்டிருந்தார். நேற்று இரவில் தூங்க

முடியாமல் தவித்ததாகவும், உங்கள் இல்ல குழந்தைகளுக்கு ரொட்டி தயார் செய்ய கடவுள் பேசியதால், இரவு முழுவதும் வேலை செய்து, ரொட்டியை எடுத்து வந்திருப்பதாகவும் கூறினார்.

சில நிமிடங்களில், பால் வண்டிக்காரர் ஒருவர் வந்தார். தன்னுடைய பால்வண்டி பழுதாகிவிட்டபடியால், அதை சரிசெய்வதற்கு நிறைய நேரம் செலவாகும் என்பதால், இந்தப் பாலை உங்கள் விடுதிக்கு எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்றாராம்.

தேவனைச் சார்ந்து வாழ்கிற வாழ்வு நிறைவானதாகவே இருக்கும் என்பதற்கு மேற்காணும் சம்பவம் நல்ல சாட்சி. தேவனை சார்ந்து வாழப் பழகுவோம்.

**சமாதானத்தின் செய்தி- இந்த வீட்டிற்கு சமாதானம்** (வ5-6)

நற்செய்தி என்பது சமாதானத்தின் செய்தி. "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத்தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." (யோவான் 3:16).

பாவத்தில் வாழ்ந்த மனிதனை, தேவன் நேசித்ததால், தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இவ்வுலகத்திற்கு அனுப்பினார்.

அவர் சிலுவையில் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாள் உயிரோடு எழுப்பினார். அவரை நம்புகிறவன் இரட்சிக்கப்படுவான். இதுவே அந்த நற்செய்தி. நற்செய்தி என்பது மனிதனுடைய வாழ்க்கையை உருமாற்றும் தேவனுடைய சக்தி.

சமாதானம் உண்டாகட்டும் என்ற வார்த்தை, ஒரு சாதாரண வாழ்த்து அல்ல. இது தேவனோடு மனிதனுக்கு இருக்கும் உறவை பிரதிபலிப்பதாகும்.

தேவன் தரும் சமாதானம் **(Shalom)** என்பது, தேவன் நம்மை நேசிக்கிறார்- பாதுகாக்கிறார்- இழந்து போன உறவை புதுப்பித்து மீண்டும் நித்திய ஜீவனை தருகிறார் என்ற நம்பிக்கையின் வெளிப்பாடு.

இயேசு கிறிஸ்துவின் சீடர்களாகிய நாம், ஒரு வீட்டிற்குள் சென்று நற்செய்தி அறிவிக்கும்போது, அவர்கள் தேவனுடைய இராஜ்யத்தின் ஆளுகையையும், சமாதானத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.

ஒரு குடும்பம், அடிக்கடி சண்டை சச்சரவினால் போராடிக் கொண்டிருந்தது. தங்களுக்குள் எதற்காக இப்படி நடக்கிறது என்று அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஒரு நாள் தேவனுடைய ஊழியர் ஒருவர் அந்த வீட்டிற்கு வந்தார். அந்த வீட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் தேவனுடைய நாமத்திலே சமாதானம் தெரிவித்து நற்செய்தியை பகிர்ந்து கொண்டார்.

சில நாட்களுக்குள், அனைவரும் ஆச்சரியப்படும்விதமாக, அந்தக் குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் குறைந்து, அமைதி வந்தது. நற்செய்தியின் வலிமை என்பது இதுதான்.

**திருப்தியான வாழ்வு - அங்கேயே தங்குங்கள்** (வ.7)

இயேசுவானவர் தனது சீடர்களிடம் திருப்தியான வாழ்வைப் பற்றி பேசுகிறார். திருப்தியான வாழ்வு என்பது என்ன? தேவன் நமக்குத் தருவதை, மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வது. "வேலையாள் தன் கூலிக்குத் பாத்திரனாயிருக்கிறான்" (1 தீமோ.5:18).

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியர் சபைக்கு எழுதும்போது, "அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்கு சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாக வேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்" (1 கொரி.9:14).

உண்மையாக தேவனுடைய ஊழியத்தைச் செய்யும்போது, அவர் எல்லாத் தேவைகளையும், சந்திக்க வல்லவராக இருக்கிறார்.

இயேசுவின் சீடர்கள், அவர் விரும்புகிற இடத்தில் இருக்கும்போது மட்டுமே, திருப்தியான வாழ்வை கண்டடைய முடியும்.

தாழ்மை, திருப்தி, தேவன் எல்லாவற்றையும் செய்வார் என்ற விசுவாசமே திருப்தியான வாழ்வைத் தரும்.

ஒரு புதிய இடத்திற்கு ஊழியம்

செய்வதற்கு ஊழியக்காரர் ஒருவர் சென்றார். கையில் பணமில்லை. ஆனாலும், நம்பிக்கையோடு, கடவுள் சொன்ன வார்த்தையை நம்பி, அங்கு சென்றார். மதிய வேளையில் பசித்தது.

அங்குள்ள ஒரு ஏழைக் குடும்பத்திற்கு நற்செய்தி அறிவித்தார். அந்த நற்செய்தியை அவர்கள் ஏற்றுக் கொண்டது மட்டுமல்லாமல், அவருக்கு உணவளித்து, அந்த வீட்டிலேயே தங்குவதற்கும் அனுமதியளித்தனர்.

இதுதான், தேவன் தனக்குக் கொடுத்த இடம் என்றறிந்தவராக, மகிழ்ச்சியுடன் அங்கு தங்கி, அந்தக் கிராமத்தில் ஊழியம் செய்து கொண்டிருந்தார்.

ஒருநாள் அந்தக் குடும்பத்தில், அரிசி முதலானவைகள் இல்லாத சூழ்நிலை ஏற்பட்டபோது, ஊழியர், குடும்பத்திலுள்ள அனைவரையும் கூடிவரச் செய்து ஜெபித்தார்.

மறுநாள் ஒருவர் அரிசி மூட்டைகள்– காய்கறிகள்– பணத்தோடு அங்கு வந்தார். நேற்று நான் ஜெபித்துக் கொண்டிருந்தபோது, தேவன் உங்கள் குடும்பத்திற்கு இந்தப் பொருட்களையெல்லாம் கொடுக்கும்படி கூறினார் என்று கூறி, அவற்றையெல்லாம் அவர்களுக்குக் கொடுத்தார்.

தேவனை சார்ந்து வாழும் வாழ்க்கையென்பது, அவர் நம்மை எங்கு வைத்திருக்கிறாரோ, அது தகுதியான இடம் என்றிருக்கும்போது, தேவன் அதை ஆசீர்வதிக்கிறார். இதில் நம் சுயசித்தத்திற்கு இடமில்லை.

இந்த இந்தியப் பெருநாட்டில், இயேசு கிறிஸ்துவைப் பற்றி ஒருமுறைக்கூட கேள்விப்படாத மக்கள் கூட்டங்கள், கோடிக் கணக்கில் இருக்கின்றனர். அவர்களுக்கு நற்செய்தி அறிவிக்க ஊழியர்களாக செல்லவும்– அப்படிச் செல்லுகிற ஊழியர்களைத் தாங்கவும்– அவர்களுக்காக ஜெபிக்கவும் நாம் கடமைப்பட்டவர்கள்.

இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன், அறுவடை நிறைந்த பகுதிக்கு ஊழியர்களை அனுப்பி, ஆத்தும அறுவடைப் பணியைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறது. இதற்காக ஜெபியுங்கள்.

“தேவன் தகுதியானவர்களை அழைக்கவில்லை;

மாறாக, அழைக்கப்பட்டவர்களை தகுதியுள்ளவர்களாக்குகிறார்.”

# 2026 ஏப்ரல் மாத வேத வினாக்களுக்கு விடைகள்

## 1 கொரிந்தியர் 9-16 அதிகாரங்கள் வரை

**பொருத்துக**

| | | |
|---|---|---|
| 1. ஸ்தேவான் | – அகாயா நாட்டில் | 16:15 |
| 2. அகாலப்பிறவி | – தரிசனம் | 15:8 |
| 3. மரணம் | – பாதாளம் | 15:55 |
| 4. கைத்தொழில் | – பர்னபா | 9:6 |
| 5. நம்பும் | – சகிக்கும் | 13:7 |

**கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. முந்தின ஆதாம், பிந்தின, உயிர்ப்பிக்கிற 15:45
2. விசுவாசம், நம்பிக்கை, அன்பு, அன்பே 13:13
3. அஞ்ஞானிகள், தேவனுக்கு, பேய்களுக்கே, பேய்களோடே 10:20
4. சுவிசேஷத்தை, மேன்மை, இடமில்லை, கடமையாயிருக்கிறது 9:16
5. அந்நியபாஷையிலே, ஆவி, கருத்து 14:14

**விடை எழுதுக**

1. எபேசு பட்டணத்தில் 16:8,9
2. நம்மை நாமே நிதானித்து அறிந்தால். 11:31
3. யூதர், கிரேக்கர், தேவனுடைய சபை. 10:33
4. போரடிக்கிற மாட்டை வாய் கட்டாயாக. 9:9
5. மனுஷருக்கு பக்தி விருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத்தக்கதாக. 14:4



**சிங்கக்குகையில் ஜெபிக்க வா!** தன் வரலாற்றுத் தொடர்

# அரசனின் கனவு!

03

**தானியேல் வாழ்க்கை வரலாறு**

**நாதன்**

பாபிலோனின் அரண்மனை அன்று அல்லோலகல்லோலமாய் இருந்தது. அரசனின் காவலர்கள், அளவுக்கு அதிகமாக, அரண்மனையில் இருந்தனர். அவர்களின் தலைவனான ஆரியோகு என்பவர், ஏதோ அவர்களிடம் கோபமாகத் தீவிரமாகப் பேசிக் கொண்டிருந்தார். இது ஒருபுறம்.



மற்றொரு புறம் ஞானிகளின் கூட்டம், இங்கும்–அங்குமாக, நடையும்–ஓட்டமுமாக இருந்தது. அவர்களின் முகங்களில் ஒருவகை பயம் இருப்பது தெளிவாகத் தெரிந்தது.

தானியேலாகிய எனக்கு ஒன்றும் முதலில் விளங்கவில்லை. ஆனால், அரண்மனை அதிகாரி ஒருவர் சொன்னார்: தானியேல், நீயும் உன் நண்பர்களும் கவனமாயிருங்கள். அரசர் மிகவும் கோபமாக உள்ளாராம். எல்லா ஞானிகளையும் (அறிவாளிகளையும்) கொல்லும்படி ஆரியோகுவுக்குக் கட்டளை வந்துள்ளதாம்.

மிக மிக அதிர்ச்சி தந்த செய்தி அது. அதன் காரணத்தை அறிய விரும்பினேன். ஆரியோகு தனியாக இருக்கும் வேளையில், அவரை மரியாதையுடன் அணுகினேன். மிக முன்னெச்சரிக்கையுடனும், விவேகத்துடனும் பேசத் தொடங்கினேன்.

மிகப்படித்தவர்களும், மேல்மட்ட வகுப்பினரும் பேசுவதற்குப் பயன்படுத்தும், அரமேய மொழியில் (சீரிய மொழி என்றும் கூறுவார்கள்) பேசத் தொடங்கினேன்.

மதிப்புக்குரிய ஆரியோகுவே, வணக்கம். உங்களிடம் ஒரு கேள்வி கேட்கலாமா?

அவர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது போன்ற கோபம் இருந்தாலும், என் பணிவான அணுகு முறையால் அவர் சொன்னார்: உன் பெயர் என்ன?

என் எபிரேயப்பெயர் தானியேல். ஆனால், அரண்மனைத் தலைவர் எனக்கு பெல்தெஷாத்சார் என்னும் பெயர் கொடுத்துள்ளார்.

உன் கேள்வி என்ன?

அரசனின் ஆணையைப்பற்றிக் கேள்விப்பட்டேன். இவ்வளவு கடுமையான கட்டளையை ஏன் அரசர் கொடுத்தார்?

ஆரியோகு சொன்னார்: பேரரசர் நேபுகாத்நேச்சார் அண்மையில் சில கனவுகள் கண்டாராம். அவை அவரைக் கலங்கடித்ததுடன், அவர் உறக்கத்தையும் பாதித்ததாம்.

ஆகவே, அவர் அரண்மனையில் உள்ள ஞானிகள் என்று அழைக்கப்படும்

குழுவை அழைத்தாராம். அவர்கள் யாரென்று உனக்குத் தெரியுமா?

தானியேலாகிய நான் பதில் சொன்னேன்: ஆம்! எனக்குத் தெரியும். நான்கு வகையினர் 1. சாஸ்திரிகள் என்னும் மந்திரவாதிகள்; 2. ஜோசியர் என்னும் மாயவித்தைக்காரர்கள்; 3. சூனியக்காரர்கள்; 4. கல்தேயர்கள். இவர்களில் கல்தேயர்கள்தான் அரசரிடம் பேசும் முதன்மை பெற்றவர்கள்.

ஆரியோகு என்னுடைய பதிலால் திருப்தியானார். தொடர்ந்தார்.

இந்த ஞானிகள் குழுவிடம் அரசர் தான் ஒரு கனவு கண்டதாகவும் அதனால், அவர் உள்ளம் மிகவும் கலக்க முற்றிருப்பதாகவும் கூறிவிட்டு, அந்தக் கனவையும் அதன் விளக்கத்தையும் அவர்கள் கூறவேண்டும் என்று கேட்டாராம்.

ஆனால், அவர்கள், அரசரே கனவைச் சொல்லுங்கள், நாங்கள் விளக்கம் கூறுகிறோம் என்று திரும்பத் திரும்பச் சொன்னார்களாம்.

அது மட்டுமல்ல, அவர்கள் அரசரிடம், "அரசரே, உமது விருப்பத்தை நிறைவேற்றக்கூடியவன் இவ்வுலகிலேயே ஒருவனும் இல்லை. இதுவரை யாரும் கனவையும் சொல்லு, அதன் விளக்கமும் சொல்லு என்று கேட்டதில்லை. கடவுள்தான் இதற்கு விடை தரவேண்டும். எந்த மனிதனாலும் முடியவே முடியாது" என்று கூறினார்களாம்.

அது அரசருக்கு மிகுந்த கோபத்தைக் கொடுத்துவிட்டது. அவர் என்னை அழைத்து "இந்த ஞானிகள் கூட்டத்தை அழித்துவிடு" என்னும் ஆணையைக்கொடுத்துள்ளார். நீயும் உன் நண்பர்களும் இந்த ஞானிகளின் கூட்டத்தார்தானே!



என் உள்ளம் நடுங்கியது. ஆனால், நான் அரசரிடம் ஓடினேன். அவர் முன் மண்டியிட்டு, "உங்கள் கனவின் பொருளை விளக்கிச் சொல்ல, சில நாள் தவணை கொடுங்கள் என்றேன். கடவுளின் அருளால் அவரும் சரி என்றார்.

வீடு திரும்பினேன். என் நண்பர்களான அனனியா, மிஷாவேல், அசரியாவைக் (சாத்ராக், மேஷாக், ஆபேத்னேகோ) கூட்டினேன்.

நாங்கள் நால்வரும் எல்லாம் வல்லவரும், எல்லாம் தெரிந்தவருமான, எங்கள் யாகுவே (யெகோவா) என்னும் அந்த சர்வ வல்லவரிடம் மன்றாடினோம்.

பாபிலோனின் ஞானிகளுடன் நாங்களும் கொல்லப்படாதிருக்க, அந்த மெய்யான தேவன் கருணைகூர்ந்து அந்த மறைபொருளை வெளிப்படுத்தவேண்டும் என்று வேண்டினோம். மன்றாட்டுகள் என்னும் ஜெபத்தைக் கேட்கும் தேவன் அவர்.

அன்றிரவு தேவன் எனக்கு அந்த மறைபொருளை வெளிப்படுத்தினார். வெளிப்பாட்டைப் பெற்ற நான் அவரைக் கீழ்க்கண்டவாறு போற்றிப்புகழ்ந்தேன்:

கடவுளின் திருப்பெயர் வாழ்த்தப் படுவதாக!
காலங்களையும், பருவங்களையும் மாற்றுபவர் நீரே!
அரசர்களை நிலை நிறுத்துபவர் நீரே.
ஞானிகளுக்கு ஞானமும், அறிவாளி களுக்கு அறிவும் தருபவரே!
ஆழ்ந்த மறைபொருள்களை வெளிப் படுத்துபவரும் நீரே.

எங்கள் பிதாக்களின் தேவனே !உமக்கு நன்றியும் புகழும் கூறுகிறேன். ஏனெனில் எனக்கு ஞானமும், வல்லமையும் கொடுத்து, நாங்கள் கேட்டதை எனக்குத் தெரிவித்து, அரசரின் காரியத்தை எங்களுக்கு வெளிப்படுத்தினீர். உம்மைத் துதித்துப் புகழுகிறேன்"

அடுத்த நாள் காலை ஆரியோகுவைச் சந்தித்து வணக்கம் தெரிவித்து இவ்வாறு கூறினேன்.

காவலர் தலைவரே, நீங்கள் பாபிலோனிய ஞானிகளை அழிக்க வேண்டாம். என்னை அரசர் முன் அழைத்துச் செல்லுங்கள். நான் அரசரின் கனவின் உட்பொருளை விளக்கிச் சொல்லுவேன்.

இதனைக் கேட்ட ஆரியோகுவின் முகம் மலர்ந்தது.

மிக விரைவாக என்னை மன்னரிடம் அழைத்துச் சென்றார்.

செல்லும் வழியில் ஜெபத்திற்கு விடைதரும் ஆண்டவரைத் துதித்துக் கொண்டே சென்றேன்.

என் நினைவுகள் பின்னோக்கிச் சென்றன. கனவுகள் மூலம் ஆண்டவர் வெளிப்படுத்துகின்றார். யாக்கோபுக்கு விண்ணுக்கும் மண்ணுக்குமான ஓர் ஏணியின் கனவைக் கொடுத்தார்.



அது மட்டுமல்லாமல் தான் ஆபிரகாமின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய கர்த்தர் என்று வெளிப்படுத்தினார் (ஆதி 28:12-13)

யோசேப்பு எகிப்தின் சிறையில் இருந்தபோது, பார்வோன் என்னும் அரசன் கண்ட கனவுகளை விளக்கிச் சொல்ல அழைக்கப்பட்டாராம். அவர் அந்த இரு கனவுகளையும் ஆண்டவரின் கருணையால் விளக்கிச் சொன்னபோது அவர் சிறைவாழ்வு முடிந்து, பார்வோனுக்கு அடுத்த தலைவராக மாறினாராம். (ஆதி 41:11-44).

தனி ஜெபமும், நானும் என் மூன்று நண்பர்களும் சேர்ந்து ஜெபிக்கும் குழு ஜெபமும் வல்லமையுள்ளது. பதில்களைக் கொண்டுவருகிறது.

அரசருக்கு முன்பாகத் தலைவணங்கி நின்றோம்.

**அடுத்த இதழில் சந்திப்போம்...**

**மன்றாட்டுகள் என்னும் ஜெபத்தைக் கேட்கும் தேவன் அவர்.**

# துதித்து மன்றாடுவோம்

## தமிழ்நாடு

மே-1

**கள்ளக்குறிச்சி மாவட்டம்**

**அருட்பணியாளர்: திரு. காவியகாந்த்**
**திருமதி.செல்வி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட நாரணம்பட்டி, மேல்பாச்சேரி, காட்டுவளவு, கெங்கப்பாடி, வெண்ணியூர், எருக்கம்பட்டு, கொட்டப்புத்தூர் ஆகிய கிராமங்களுக்காக, ஆலய கட்டுமானப்பணி தொடங்கியதற்காக, சபை விசுவாசக் குடும்பங்கள் பாதுகாக்கப்பட்டதற்காகத் துதிப்போம். அண்ணாமலை, காமாட்சி, அன்பழகன், அமுதா, சம்யுக்தா, நந்தினி, சூர்யா ஆகியோர் இரட்சிக்கப்பட, பூமதி, ராஜேஸ்வரி ஆகியோருக்கு சுகப்பிரசவம் கிடைக்க, ராதா (மனநோய்) சுகம் பெற ஜெபிப்போம்.

**கடலூர் மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு. M. லிங்கம்**
**திருமதி. கலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அருகேரி, வடகரை, தொளார், எறப்பாவூர், மருவத்தூர், பொன்னேரி, பெண்ணாடம் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட 21 பேருக்காக, ரமேஷ்பாபுவுக்கு திருமணம் நடைபெற்றதற்காக, சங்கீதா திருமுழுக்கு பெற்றதற்காகத் துதிப்போம். ராஜவேணி, ராமசாமி, ராம்குமார், சின்னக்கண்ணு, சித்ரா, சங்கீதா, பரமசிவம், லட்சுமி, சுரேஷ், சந்தோஷ் குமார், நீலா, விஜயா, சூர்யா, விஜய்பிரியா, தர்ஷினி, சாந்தி, துளசி, வளர்மதி, தேவேந்திரன், எழிலரசன், பரமசிவம், ராஜா ஆகியோர் இரட்சிக்கப்பட, ராஜா குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, தொளாரில் ஜெபக்குழு தொடர்ந்து நடைபெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. V.சிவராமன்**
**திருமதி. பெரியநாயகி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சுமைதாங்கி, செம்பேரி, இருளம்பட்டு, சின்ன கொசபள்ளம், கீரனூர் ஆகிய கிராமங்களுக்காக, அஞ்சுகம் பிள்ளைகளுக்கு தேவன் தந்த சுகத்திற்காக, சந்துருவுக்கு வேலை கிடைத்ததற்காகத் துதிப்போம். பிரதீபா, அபிதா, பாவினா, அபிநயா, அனுஷ்கா, பேபிசாலினி, பிரனித்தா, மாலதி, பழனிவேல், வெங்கடேஸ்வரி ஆகியோர் இரட்சிக்கப்பட, லட்சுமி (கால் அறுவைச்சிகிச்சை), அருண்மொழி (சிறுநீரக நோய்) ஆகியோருக்கு சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**ஈரோடு மாவட்டம்**

மே -2

**அருட்பணியாளர்:**
**திரு.G.தனம் யோகராஜ் – திருமதி.டான்சி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சென்னம்பட்டி, குருவை ஆகிய கிராமங்களுக்காக, கோபால்சாமி, கருப்பண்ணன், பழனியம்மாள் குடும்பம், சண்முகசுந்தரம் ஆகியோர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். ஹிரித்திக், சந்தியா குடும்பம் இரட்சிக்கப்பட, கோபால்சாமிக்கு (உடைந்த வலது கை) சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**திரு. அதிசய அமலன்**
**திருமதி. ஆனந்தி விமலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட எலத்தூர், செட்டிபாளையம், வெட்டயம்பாளையம், எலத்தூர் மில் ஆகிய கிராமங்களுக்காக, பெரியசாமி, ராதிகா, செல்லாயாள், அமாவாசை ஆகியோருக்கு தேவன் தந்த சுகத்திற்காகத் துதிப்போம். மாதேஷ், காளியம்மாள், சண்முகம், லட்சுமி ஆகியோருக்காக, பெரியசாமி, ராதிகா ஆகியோர் இரட்சிக்கப்பட, லீதியாள், கருப்பாயாள், சதீஷ் ஆகியோருக்கு சுகம் கிடைக்க, கேசவன் கடன் பிரச்சினையிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

## கோயம்புத்தூர் மாவட்டம்

**சுயசார்புத் திருச்சபை** மே-3

**அருட்பணியாளர் :**

**திரு. லூர்டஸ்- திருமதி. கிளாடிஸ்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பில்சின்னம்பாளையம், பூவளபருத்தி, குள்ளேகவுண்டனூர், சண்முகாபுரம், அங்களக்குறிச்சி, பொன்னாச்சியூர், உப்பிலியனூர், ஆவல்சின்னாம்பாளையம், சமத்தூர் ஆகிய கிராமங்களுக்காக, சிவன், குருநாதன், சரஸ்வதி, கலையரசி, மங்கலம்மாள், சாதிக் ஆகியோர் நற்செய்தியை ஏற்றுக்கொண்டதற்காக, சாரல் மூட்டு வலியிலிருந்து சுகம்பெற்றதற்காக, ராணிக்கு தேவன் ஆண் குழந்தையை தந்ததற்காக, சிம்சோன் இருதய நோயிலிருந்து சுகம் பெற்று வருவதற்காகத் துதிப்போம். நற்செய்தியை கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, குழந்தையை இழந்த கிரீட்டாவுக்கு தேவன் ஆறுதல் தர, ஜான்சிக்கு சுகப் பிரசவம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு.எபிநேசர் உவைட்–திருமதி. மேரி**

சந்தியா, பிரேம் ஆகியோருக்கு கிடைத்த வேலைக்காக, தினேஷ் தம்பதிக்கு தேவன் தந்த பெண் குழந்தைக்காகத் துதிப்போம். வேலுச்சாமி, லட்சுமி, முருகேசன், பூபதி, ஜெயசீலியின் கணவர், ரம்யாவின் கணவர் ஆகியோர் இரட்சிக்கப்பட, முருகேசன் (முதுகு வலி), ஆபிரகாம், கிருபை ஆகியோருக்கு சுகம் கிடைக்க, ரெபேக்காள் ஆராதனையில் கலந்து கொள்ள ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**

**திரு. இம்மானுவேல் கிளமென்ட் கிப்ட்சன்**
**திருமதி. செல்லாண்டீஸ்வரி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட நாட்டுக்கல்பாளையத்திற்காக, மயிலாத்தாளுக்கு உதவிய ஜோதிக்காக, புனித வெள்ளியன்று 7 விசுவாசிகள் "ஏழு வார்த்தைகளை" பிரசங்கித்ததற்காகத் துதிப்போம். தாமரை இரட்சிக்கப்பட, ஜான் மீண்டும் ஆராதனையில் கலந்து கொள்ள, நந்தகுமார், ரஞ்சித், முத்து ஆகியோர் விசுவாசத்தில் வளர, கோடை விடுமுறை வேதாகமப் பள்ளி சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

மே-4

**அருட்பணியாளர் :**

**திரு. R. ஸ்டீபன் செல்வகுமார்**
**திருமதி. கரோலின்**

வாழைக்கொம்பு, நாகூர், புது காலனி, அம்பராம்பாளையம், ஆத்துப்பொள்ளாச்சி, மீனாட்சிபுரம், நஞ்சேகவுண்டன் புதூர் ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, உம்சல்மா, நடராஜ், ராஜ்குமார் ஆகியோர் திருமுழுக்கு எடுக்க முன் வந்ததற்காக, தீனா ஊழியம் செய்ய தன்னை அர்ப்பணித்ததற்காக, சிறுவர் ஊழியம் தடையின்றி நடைபெறுவதற்காகத் துதிப்போம்.

ராஜ்குமார், ராமகிருஷ்ணன், பால்ராஜ், பாலாமணி, முத்துக்குமார், மந்திரி குமார், கஸ்தூரி, வைத்தீஸ்வரி, சுகன்யா, பேபி,வசந்த், ரமேஷ், யுவராஜ், மனோதினி, சிவா, பிரசாந்த் ஆகியோர் இரட்சிக்கப்பட, மந்திரி, சாமிக்கண்ணு ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, ராணி, கன்னீஸ்வரி, வள்ளி, ஜான் பீட்டர் ஆகியோர் விசுவாசத்தில் வளர, ஆலயம் கட்ட இடம் வாங்கப்பட ஜெபிப்போம்.

**திருப்பூர் மாவட்டம்**

**அருட்பணியாளர்:**

**திரு. S. பால்ராஜ் –திருமதி. மரியாள்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குருணைக்கல்பட்டி, பிச்சைக்கல்பட்டி, சின்னமருதூர், உப்புக்கரை ஆகிய கிராமங்களுக்காக, ஆபிரகாம் பக்கவாதத்திலிருந்து சுகம் பெற்றதற்காக, நரேஷ், சூர்யா, உதயகிரி, ஜெயகாந்தன் ஆகியோர் நற்செய்தியை ஆர்வமாக கேட்டதற்காக, ரவி விபத்தில் இருந்து பாதுகாக்கப்பட்டதற்காகத் துதிப்போம். ரவி கால் முறிவிலிருந்து நிறைவான சுகம் கிடைக்க, சகுந்தலா, மோசஸ், தமிழ்ச்செல்வி ஆகியோர் ஆராதனையில் கலந்து கொள்ள, காலேப் மளிகை கடை வைத்திருக்கும் இடத்தை சொந்தமாக வாங்க, அற்புதா கணவனுடன் சேர்ந்து வாழ ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு.G. பால்துரை**

**திருமதி. ஜெபரூபி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கிளாங்குண்டல், வடுகப்பட்டி, அறிவொளி நகர், புதுக்கோட்டை ஆகிய கிராமங்களுக்காக, வண்ணக்கிளிக்கு தேவன் தந்த சுகத்திற்காக, ராமலிங்கம் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற்றதற்காக, கோமதி மீண்டும் ஆராதனையில் கலந்து கொள்வதற்காகத் துதிப்போம். கருணாநிதி, சித்ரா (மனநோய்) ஆகியோர் நிறைவான சுகம் பெற, யோசுவா குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, மேரிக்கு வேலை கிடைக்க, சபை வாலிபர்கள் தேவ ஐக்கியத்தில் வளர ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை** மே-5

**அருட்பணியாளர் :**

**அருள்திரு. சாலமோன்ராஜ்**

**திருமதி. ஜெயக்கொடி**

40நாட்கள் உபவாச ஜெபம் நடைபெற்றதற்காக, சந்திரன்–பூபதி ஆகியோர் வீடுகட்டி முடித்து மங்களப்படைப்பு செய்யப்பட்டதற்காக, கலா (தொண்டை கட்டி அறுவைச்சிசிச்சை) சுகம் பெற்றதற்காக, பிரியா, குமாரசாமி, கோதாவரி, குமார், சசிகுமார், குணசேகர் ஆகியோர் புதிதாக ஆராதனையில் கலந்து கொண்டதற்காக, பாக்கியா, புருஷோத்தமன், செல்வா, பிரதிப், சரவணன், லட்சுமி ஆகியோர் கடன்பிரச்சனையிலிருந்து விடுதலை பெற்றதற்காகத் துதிப்போம். சங்கீதாவுக்கு குழந்தைபாக்கியம் கிடைக்க, பழனாத்தாள் (இருதய வால்வு நோய்), கலைவாணி (தைராய்டு நோய்), பழனியமாள் (கால் எலும்பு குடைச்சல் நோய்) ஆகியோர் நிறைவான சுகம் பெற, முருகவேல், வேலாள், கவியரசன் ஆகியோர் மீண்டும் ஆராதனையில் கலந்து கொள்ள ஜெபிப்போம்.

**திருச்சி மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு.J.P.ரவிக்குமார்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கிராமங்களுக்காக, நற்செய்தி கேட்ட ஜனங்களுக்காகத் துதிப்போம். பின்வாங்கி

போனவர்கள் திரும்பவும் ஆராதனையில் கலந்து கொள்ள, பொது தேர்வு எழுதியிருக்கும் பிள்ளைகள் அதிக மதிப்பெண்கள் பெற, சிறுவர் மற்றும் வாலிபர்கள் ஊழியங்கள் தொடர்ந்து நடைபெற, ஊழியர் வீடு கட்டுமானப் பணிகள் நிறைவடைய ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு.B. தினேஷ் – திருமதி. எமீமா பியூலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கீழக்குறிச்சி, பெரியார் தெரு, மேலகலங்கண்டார் கோட்டை, கீழக்கலங்கண்டார் கோட்டை, மாவடிகுளம், மலையடிவாரம் ஆகிய கிராமங்களுக்காக, தீபா, மருதாயி, ஜானகிராணி, பிங்கி ஆகியோருக்கு தேவன் தந்த சுகத்திற்காக, பிரீத்திக்கு நல்ல வேலை கிடைத்ததற்காகத் துதிப்போம். விமல்ராஜ், மாலினி, தர்மேந்திரா, திலீப், கானா, ஆஹான், பூமிஸ், புவன், செந்தில், கங்கா, தாமரை, பிரபாவதி, ரேவதி, கௌரி, சௌமியா, அனுசியா, லட்சுமி ஆகியோர் இரட்சிக்கப்பட, குருநாதன் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, பிரகாஷ்–ஜெனி தம்பதியினருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

**மே-6**

**மதுரை மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு. வின்சென்ட் திருமதி. பவுலின் கிரேஸ்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சின்ன வாகைக்குளம், வாகைக்குளம், தாழையூத்துப்பட்டி, முண்டுவேலம்பட்டி, ஒத்தவீடு, கீழக்குயில்குடி ஆகிய கிராமங்களுக்காக, ஐந்து நபர்கள் திருமுழுக்கு எடுத்ததற்காக, ராஜ்குமார் ஆராதனையில் கலந்து கொண்டதற்காக, வைரமணி, லேவி கிரேஸ்சன் ஆகியோருக்கு தேவன் தந்த சுகத்திற்காகத் துதிப்போம். சிவராஜ், உமா, இதயா, சுதா, நதி, முத்துலட்சுமி, கோபிகா, அபிநயா, சுப்புராஜ், ஷர்மிளா, ராஜ்குமார் ஆகியோர் இரட்சிக்கப்பட, ராணிக்கு (புற்று நோய்), ஹர்ஷிதா (இரத்தக் குறைபாடு) நோயிலிருந்து சுகம் பெற, புளிய கவுண்டன்பட்டியில் புதிதாக சிறுவர் ஊழியம் ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு. S. சாமுவேல்–திருமதி. ரோகிணி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட T.வாடிப்பட்டி, போடிநாயக்கன்பட்டி, தாதம்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, பார்த்திபனுக்கு நிரந்தர வேலை கிடைத்ததற்காக, தவத்திற்கு தேவன் தந்த சுகத்திற்காகத் துதிப்போம். அன்னத்தாய், மாணிக்கம், சுஜாதா, முருகன் ஆகியோர் இரட்சிக்கப்பட, அங்கயற்கண்ணிக்கு அரசு வேலை கிடைக்க, ரெபேக்காள் (புற்று நோய்), தவம் (உடல் சோர்வு) ஆகியோருக்கு சுகம் கிடைக்க, ஸ்ருதிக்கு திருமணம் நடைபெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு. பிரவீன்குமார்–திருமதி. மீனா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட T.அரசப்பட்டி, சமத்துவபுரம், வெயிலுகந்தபுரம், காமாட்சிபுரம், குளத்துவாய்ப்பட்டி, தூம்பக்குளம், வலையங்குளம் ஆகிய கிராமங்களுக்காக, ஜேம்ஸ் புதிதாக ஆராதனையில் கலந்து கொள்வதற்காக, ஊழியரின் மனைவிக்கு கிடைத்த பெண் குழந்தைக்காகத் துதிப்போம். மாரி, கருப்பு, திவ்யா, மாரியம்மாள், பழனியம்மாள், லட்சுமி ஆகியோர் இரட்சிக்கப்பட, கருப்பு குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, CVG VBS நல்ல முறையில் நடைபெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :** மே-7

**திரு. M. கார்த்தி-திருமதி. ரீஜா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சென்னம்பட்டி, புதுப்பட்டி, பூசலபுரம், ஜம்பலாபுரம் ஆகிய கிராமங்களுக்காக, தீபா மகள், ரெபேக்காள் அக்கா மகன் ஆகியோருக்கு கிடைத்த வேலைக்காக, சீலா மகள் ஆண்டவரை ஏற்றுக் கொண்டதற்காக, அங்கம்மாள் குருவம்மாள் ஆகியோர் புதிதாக ஆராதனையில் கலந்து கொள்வதற்காகத் துதிப்போம். முத்துலட்சுமி குடும்பம், அங்கம்மாள், குருவம்மாள் ஆகியோர் இரட்சிக்கப்பட, சீலா மகளுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, தானியேல், இம்மானுவேல், எரேமியா, அபி ஆகியோர் திருமுழுக்கு எடுக்க, CVG VBS நல்ல முறையில் நடைபெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு. A. கந்தசாமி-திருமதி. முருகம்மாள்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட இந்திரா காலனி, கீழ உரப்பனூர், பள்ளக்காபட்டி, வாகைகுளம் பிரிவு, திருமங்கலம் ஆகிய பகுதிகளுக்காக திலகராணி, முனுசாமி ஆகியோருக்கு தேவன் தந்த சுகத்திற்காக, சாரதா புதிதாக ஆராதனையில் கலந்து கொள்வதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, நெல்சனுக்கு திருமணம் நடைபெற, காயத்ரிக்கு தேவன் சுகம் தர, ஆலய மறுகட்டுமானப் பணியின் தேவைகள் சந்திக்கப்பட, ஊழியரின் குடும்பத்திற்காக, CVG VBS நல்ல முறையில் நடைபெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு. P. சத்தியநாதன்-திருமதி. கிறிஸ்டி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட வெங்கடாசலபுரம், குச்சம்பட்டி, கோபாலபுரம், ரெட்டியாரப்பட்டி, வையூர், முத்துலிங்கபுரம் ஆகிய கிராமங்களுக்காக, ஜெயபாரதி, ஜான்சிராணி, சத்தியப்பிரியா, மோனிஷா, தமிழ்ச்செல்வி, அஜித் ஆகியோர் திருமுழுக்கு எடுக்க அர்ப்பணித்ததற்காக, சுபலெட்சுமிக்கு தேவன் தந்த சுகத்திற்காகத் துதிப்போம். செல்வி, கலை, கார்த்திகா, கௌதம், அருண்குமார், சரண்யா, நல்லம்மாள், நாகராஜ், திருப்பதி, கஸ்தூரி, கார்த்தீஸ்வரன், கார்த்திகா செல்வி, பாண்டி ஆகியோர் இரட்சிக்கப்பட, அம்பிகா, முத்துப்பாண்டி, சந்துரு, கூடம்மாள் ஆகியோர் தொடர்ந்து ஆராதனையில் கலந்து கொள்ள, கஸ்தூரிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, சீதா லட்சுமியின் குடும்பத் தேவைகள் சந்திக்கப்பட, CVG VBS நல்ல முறையில் நடைபெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :** மே-8

**திரு. P. ராஜா-திருமதி. அன்னாள்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கரடிக்கல், மொட்டைப்பாறை, காந்தி நகர், எம்ஜிஆர் காலனி ஆகிய கிராமங்களுக்காக,புதிதாக நற்செய்தி கேட்ட நாகலட்சுமி, பார்வதி, லட்சுமி, கணேஷ், சாந்தி, தனலட்சுமி ஆகியோருக்காக, ஸ்வேதாவிற்கு வேலை கிடைத்ததற்காக, பார்வதி பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதற்காக, நாகலட்சுமி மூச்சுத் திணறல் நோயிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, ஆனந்திக்கு வேலை கிடைக்க, சுகந்தியின் தாத்தா சிறுநீரகக்கல் நோயிலிருந்து சுகம் பெற, தீபக், அருண் ஆகியோர் 12 ஆம் வகுப்பு தேர்வில் அதிக மதிப்பெண்கள் எடுக்க, மொட்டப்பாறை, காந்திநகர் ஆகிய பகுதிகளில் தடை இல்லாமல் சிறுவர் ஊழியம் நடைபெற, பிரேமாவிற்கு

சுகப்பிரசவம் கிடைக்க, CVG VBS நல்ல முறையில் நடைபெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**திரு. காளிமுத்து-திருமதி. குமுதா**

நற்செய்திக்கு ஆர்வம் காட்டும் பாண்டியம்மாவுக்காக, நீண்ட நாட்களுக்குப் பிறகு சபை ஆராதனையில் பங்கு பெற்ற தங்க திரவியத்திற்காகத் துதிப்போம். யோகேஷ், ரோஷன் ஆகியோர் திருமுழுக்கு பெற, பாண்டியம்மாள் ஆராதனையில் கலந்து கொள்ள, மணிமேகலை சிறுநீரகக்கல் நோயிலிருந்து சுகம் பெற, பாக்கியலட்சுமி இடுப்பு பலவீன நோயிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் : திரு. ஏனோக்**
**திருமதி.பாலின் சௌந்தர்யா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஜோதிமாணிக்கம், கொடிக்குளம் ஆகிய கிராமங்களுக்காக, தாரணியின் தொலைந்து போன நகை திரும்ப கிடைத்ததற்காக, சந்திரா தோல் ஒவ்வாமை நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, ராசாத்தி அம்மாள் வீடு கட்டி முடிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். பிரீத்தா இரத்த அணுக்கள் குறைபாடு நோயிலிருந்து சுகம் பெற, சுவாதியின் திருமணத் தேவைகள் சந்திக்கப்பட, சுபா, கொடி ஆகியோருக்கு சுகப்பிரசவம் கிடைக்க ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை** **மே-9**

**அருட்பணியாளர் :**
**திரு. M. அகஸ்டின்-திருமதி. ஜோஸ்பின்**

புதிதாக நற்செய்தி அறிவிக்கப்பட்ட முண்டுவேலம்பட்டி, சக்கரப்பட்டி, செல்லம்பட்டி, மணல்பட்டி, காந்திநகர், சங்கம்பட்டி ஆகிய பகுதிகளுக்காக, ஒச்சம்மாளுக்கு அரசாங்க வேலை கிடைத்ததற்காக, சந்தானம், மகிழ்வன் ஆகியோருக்கு கர்த்தர் கொடுத்த சுகத்திற்காகத் துதிப்போம். கலைமணி வீடு கட்டுவதற்கு பணத் தேவைகள் சந்திக்கப்பட, வாலிபர்களுக்கு நல்ல வேலை கிடைக்க-ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க, ஜீவா மூச்சுத் திணறல் நோயிலிருந்து சுகம் பெற, CVG VBS நல்ல முறையில் நடைபெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**சகோதரி. எஸ்தர் செல்வராணி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட லிங்கப்பநாயக்கனூர், சுளிஒச்சான்பட்டி, கொப்பிலிபட்டி, அப்பனம்பட்டி, திம்மனத்தம் ஆகிய கிராமங்களுக்காக, ராஜேஸ்வரிக்கு வேலை கிடைத்ததற்காக, பிரிந்து வாழ்ந்த ஈஸ்வரன் குடும்பம் மீண்டும் இணைந்ததற்காக, பிளசன், ரோஜா ஆகியோர் தொடர்ந்து ஆராதனைக்கு வருவதற்காகத் துதிப்போம். மாயன், சூர்யா, ஒச்சு, சின்னன், ஒச்சாயி, பன்னீர், பிரியா ஆகியோர் இரட்சிக்கப்பட, ஈஸ்வரன், தாவீது ஆகியோர் தொடர்ந்து ஆராதனையில் கலந்து கொள்ள ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**அருள்திரு.M. மூவேந்திரன்**
**திருமதி. விஜயா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அயோத்திப்பட்டி, வகுரணி, நடுப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, ஜான், மணி, அம்சு, உஷா தங்கை, மோசஸ் மகன் ஆகியோருக்கு தேவன் தந்த சுகத்திற்காக, சரண்யாவுக்கு கிடைத்த குழந்தை பாக்கியத்திற்காக, உஷா மருமகள் வளைகுடா யுத்தத்தில் பாதுகாக்கப்பட்டதற்காக, ராமசாமிக்கு நீதி கிடைத்ததற்காக, பரமசிவம், ஆனந்தகுமார் ஆகியோருக்கு தேவன் செய்த

அற்புதத்திற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட ரவிச்சந்திரன், கமலக்கண்ணன், அர்ச்சனா தேவி, ரமேஷ், லதா, கார்த்திக், சின்னசாமி, கன்னுச்சாமி, முத்து ஆகியோர் இரட்சிக்கப்பட, அம்சு, காந்தியம்மாள், சுப்புத்தாய், புஷ்பம், ராமசாமி, சந்திரா தேவி ஆகியோருக்கு சுகம் கிடைக்க, ஐஸ்வர்யாவுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, சினேகா, சரண்யா ஆகியோருடைய குழந்தைகளின் சரீர வளர்ச்சி சரியாக இருக்க, மோசஸ் மணி, ராஜன் ஆகியோருக்கு திருமணம் நடைபெற, சந்திரா தேவி, கமலக்கண்ணன் வீட்டில் சமாதானம் கிடைக்க ஜெபிப்போம்.

மே-10

**அருட்பணியாளர் :**

**திரு. A. பால்ராஜ்-திருமதி. ஏஞ்சல்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கூத்தியார்குண்டு, இலங்கை அகதிகள் முகாம், தோப்பூர், சிப்காட் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக ஆராதனையில் கலந்து கொண்ட பிரியா, வாசுதேவன் குடும்பத்திற்காக, சாரதா-சுந்தரலிங்கம் ஆகியோரின் தொழில் ஆசீர்வதிக் கப்பட்டதற்காகத் துதிப்போம். லட்சுமி, ராமர், வினிதா, புவனேஷ், பாலமுருகன், மருதுபாண்டி, விக்னேஷ் ஆகியோர் இரட்சிக்கப்பட, பிரேமா-தாமரைக்கனி, நிஷாந்தி-ராஜாசிங் ஆகிய தம்பதியினருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, விக்னேஷ் பெற்றோருக்கு சமாதானம் கிடைக்க, மருதுபாண்டி தொழில் வளர்ச்சி அடைய, CVG VBS நல்ல முறையில் நடைபெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு. G. ஜெகன்-திருமதி. திவ்யா**

அஞ்சுக்கனியின் கணவர் இரட்சிக்கப்பட, ஊழியரின் மனைவி மற்றும் மகள் ஜெர்லினுக்கு தேவன் நல்ல சுகம் தர, கைப்பிரதி ஊழியம் மூலம் சந்திக்கப்பட்டவர்கள் இரட்சிக்கப்பட, CVG VBS நல்ல முறையில் நடைபெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு. ஜஸ்டின் சாமுவேல் - திருமதி. சுபா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சம்பக்குடி, வடிவேல்கரை, சக்தி நகர், லாலா சத்திரம், ஏற்குடி, காந்திநகர் ஆகிய கிராமங்களுக்காக, சிறுவர் கூடுகையில் 40 பேர் கலந்து கொண்டதற்காக, புதிதாக ஆராதனையில் கலந்து கொள்ளும் பரிமளாவுக்காக, சந்தியாவுக்கு குழந்தை பாக்கியம் கிடைத்ததற்காகத் துதிப்போம். பிரிந்து வாழும் பாலா-நிவேதா தம்பதியினர் மீண்டும் சேர்ந்து வாழ, செல்வராஜ், சக்திவேல், ரித்திக் ஆகியோர் போதை பழக்கத்திலிருந்து விடுதலை பெற, தாயை இழந்து வாடும் சோபியாவுக்கு தேவ ஆறுதல் கிடைக்க, சக்தி நகர், துரைசாமி நகர் ஆகிய பகுதிகளில் CVG நல்ல முறையில் நடைபெற ஜெபிப்போம்.

மே-11

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**

**திரு. பிலிப் முருகன்-திருமதி. அனிதா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கிராமங்களுக்காக, நற்செய்தி கேட்ட ஜனங்களுக்காகத் துதிப்போம். பின்வாங்கி போனவர்கள் திரும்பவும் ஆராதனையில் கலந்து கொள்ள, பொது தேர்வு எழுதியிருக்கும் பிள்ளைகள் அதிக மதிப்பெண்கள் பெற, சிறுவர் மற்றும் வாலிபர்கள் ஊழியங்கள் தொடர்ந்து நடைபெற ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**

**திரு. வயநாட்டுமுத்து-திருமதி. கனியமுது**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சொரிக்காம்பட்டி கிராமத்திற்காக, ஜீவரத்தினத்திற்கு தேவன் கொடுத்த ஆண் குழந்தைக்காகத் துதிப்போம். சாமுவேல், சாந்தகுமார், சீதா ஆகியோருக்கு நிரந்தரமான வேலை கிடைக்க-ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க, கனகா, முத்துலட்சுமி, பாண்டீஸ்வரி ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, ராணியம்மாளின் தோட்டம் நல்ல விலைக்கு விற்கப்பட, CVG VBS நல்ல முறையில் நடைபெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு. J. ஜெயகுமார்-திருமதி. கனி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அடைக்கன்பட்டி, முத்துப்பட்டி, மணப்பட்டி, வெள்ளபாறைபட்டி, தனக்கன்குளம் ஆகிய கிராமங்களுக்காக, வெளிநாடுகளில் வேலை செய்யும் ஜெகன், சீனு, சித்து ஆகியோர் வளைகுடா பகுதியில் நடந்து கொண்டிருக்கிற போரிலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காகத் துதிப்போம். தினேஷ், ஜெகதீஷ், மீனாட்சி, நவீன், முகிலன், ஆகாஷ், அஸ்வின், கௌசிகா அருண் , மீனா, பேரரசு, முத்துராமன், சாந்தி ஆகியோர் இரட்சிக்கப்பட- திருமுழுக்குப் பெற, கனிக்கு நிறைவான சுகம் கிடைக்க, CVG VBS நல்ல முறையில் நடைபெற ஜெபிப்போம்.

**தேனி மாவட்டம்** **மே-12**

**அருட்பணியாளர் :**

**திரு. P. தேவதாஸ்-திருமதி. பிலோமினா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாலக்கோம்பை, தெப்பம்பட்டி, அழகாபுரி ஆகிய கிராமங்களுக்காக, பேரின்பம், ரெபேக்காள் ஆகியோர் 40 நாட்கள் தவக்கால உபவாச கூடுகையில் கலந்து கொண்டதற்காகத் துதிப்போம். மணிகண்டன், துர்க்கா, குருதேவி, சங்கிலியம்மாள், லிக்னேஷ், குருவம்மாள், பாரதி, தினேஷ்குமார், கோபால், பாண்டியன், முருகன், செல்வம் ஆகியோர் இரட்சிக்கப்பட, பூபதியம்மாள், காட்டு ராஜா ஆகியோருக்கு சுகம் கிடைக்க, நிரஞ்சனா தேவி, கௌசல்யா ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, கோமதியம்மாள், சுப்பம்மாள், வாசுகியம்மாள், சொக்கலிங்கம், அருணாச்சலம், தேவ சமாதானம் ஆகியோருக்கு தேவன் நல்ல சுகம்- பெலன் கொடுக்க, CVG VBS நல்ல முறையில் நடைபெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு.G. நாதன்-திருமதி. மேகலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கண்டமனூர், பொன்னம்மாள் பட்டி, தேக்கம்பட்டி, அடைக் கம்பட்டி, டீ.மீனாட்சிபுரம் ஆகிய கிராமங் களுக்காக, ஜான்சிக்கு ஆண் குழந்தை கிடைத்ததற்காகத் துதிப்போம். அம்சவல்லி, ஈஸ்வரன், மேனகா, ஸ்வேதா, அமுல்பாண்டி, செந்தூரன், ஜெயஸ்ரீ, பழனிச்சாமி, பாலகுருத்தாய், மகேஸ்வரி, கனி, ராஜேஸ்வரி, பூவரசன் ஆகியோர் இரட்சிக்கப்பட, ராஜேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, ஈஸ்வரன், செந்தூரன் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, பழனிச்சாமிக்கு வேலை கிடைக்க, அம்சவல்லிக்கு சுகம் கிடைக்க, ஸ்வேதாவுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்க, CVG VBS நல்ல முறையில் நடைபெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு.J.உலகநாதன்-திருமதி. சுபா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மேல்மங்கலம்,

வடுகப்பட்டி, வள்ளுவர் காலனி, ஆசிரியர் காலனி, கோட்டப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, சங்கீதா, விஜயலட்சுமி, முத்துலட்சுமி ஆகியோருக்கு தேவன் தந்த சுகத்திற்காக, மாரிசாமி குடும்பத்தில் சமாதானம் கிடைத்ததற்காகத் துதிப்போம். விஜயலட்சுமி, சாந்தி, முனீஸ்வரன், புவனேஷ் பாண்டி, சிவபெருமாள், பாரதி, ஹரிஹரன், ரோகிணி, சித்ரா, பாண்டிச்செல்வி, அபிநயா, பழனிச்சாமி, முருகன், சங்கீதா, சுப்புலட்சுமி, பாலச்சந்திரன், மகேஸ்வரி, விஜயா, காந்திமதி, ஆதிகேசவன், பிச்சை, பாப்பாத்தி குடும்பம் இரட்சிக்கப்பட, பாலச்சந்திரன், விஜயா, விஜி, ராஜசேகர் ஆகியோர் விசுவாசத்தில் வளர, பஞ்சவர்ணம் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற, மாதேசுக்கு வேலை கிடைக்க, CVG VBS நல்ல முறையில் நடைபெற ஜெபிப்போம்.

**விருதுநகர் மாவட்டம்**

மே-13

**அருட்பணியாளர் :**

**அருள்திரு.B. சாமுவேல் கணேசன்**
**திருமதி. விஜயா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட தண்டியனேந்தல், தோணுகால் ஆகிய கிராமங்களுக்காக, லட்சுமி பிரியா புதிதாக ஆராதனையில் கலந்து கொள்வதற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்டவர்களுக்காக, ஆலய சீரமைப்பு பணிகள் நடைபெற,CVG VBS நல்ல முறையில் நடைபெற ஜெபிப்போம்.

**தென்காசி மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு. லிவிங்ஸ்டன்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மணலூர், பெருமத்தூர், கோயிலாகுளம், கரிவலம்வந்தநல்லூர், குவலக்கண்ணி, பச்சேரி ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். திருச்சபைக்கென்று ஒரு இசைக்கருவி வாங்கப்பட, CVG VBS நல்ல முறையில் நடைபெற ஜெபிப்போம்.

**கரூர் மாவட்டம்**

**அருட்பணியாளர் :**

**திரு. J. பவுல்ராஜ்– திருமதி. எமீமாள்.**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சேங்கலாபுரம், கீழ் பசுபதிபாளையம், செல்லப்பாளையம், பழமாபுரம், வெள்ளாளப்பட்டி, குப்பமேட்டுப்பட்டி, ஆத்தூர், பஞ்சமாதேவி ஆகிய கிராமங்களுக்காக, ஸ்ரீஜாவிற்கு தேவன் கொடுத்த குழந்தை பாக்கியத்திற்காகத் துதிப்போம். குமரேசன் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, புவனேஷ்வரிக்கு சுகப்பிரசவம் கிடைக்க, ஹெரால்டு சிறுநீரகக்கல் நோயிலிருந்து சுகம் பெற, ஜெயக்குமார்– ஜெயரதி தம்பதியினர் மீண்டும் சேர்ந்து வாழ, ஜான்ஸி ராணிக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க, குமரேசன், மோகன், ரஞ்சித், பிரேம், சதீஷ்குமார், இந்து, தன்ஷியா, வினோதினி, வர்ஷா, சம்யுக்தா ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**விழுப்புரம் மாவட்டம்**

மே-14

**அருட்பணியாளர் :**

**திரு.D. தங்கராஜ்–திருமதி. எஸ்தர் பிரியா**

ஜெனிபருக்குத் திருமணம் நடைபெற்றதற்காக, ஆரோக்கியதாஸ், சுதா ஆகியோருக்கு தேவன் தந்த சுகத்திற்காக, வீரப்பன் வீடு கட்டி முடிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். சந்திரசேகர்–ரஞ்சிதா குடும்பம், அமிசா குடும்பம் இரட்சிக்கப்பட, வெண்ணிலா (இருதய அடைப்பு) நிறைவான சுகம் பெற, பிரகாஷ், தேவராஜ், வீரப்பன், ஆரோக்கியதாஸ், ராஜீ ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, குணசீலனுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை

கிடைக்க ஜெபிப்போம்.

**தரிசனம் பரப்புவோர்**

இயக்கத்தின் பொருளாதாரத் தேவைகள் சந்திக்கப்பட, புதிய தரிசனம் பரப்புவோர் கிடைக்க, புதிய ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட, திரு.T. விஜயசங்கர் (தரிசனம் பரப்புவோர் உதவி இயக்குநர்), ஊழியர்கள்: திரு.R. பால சுப்பிரமணியன், திருமதி. ஹெர்சி லீதியாள் மாசில்லாமணி, திருமதி.C. மேபல் ராணி, திருமதி. இந்திராணி கில்பர்ட், திருமதி. தீபா மோசஸ், திருமதி.J. பிளஸ்ஸி, திரு. வினு, திருமதி. ராணி வின்சென்ட், திரு.K. பால்ராஜ், திரு.S. சம்பத்குமார், திரு. தாங்லம் ஜோ, திரு. காளிமுத்து, திரு.A. தம்புராஜ், திரு.P. மாரியானந்தன், திருமதி. சுப்புலட்சுமி, திருமதி.T. சுசீலா, திரு.M.M. சாலமோன், திரு.F. ஹென்றி ஜார்ஜ், திருமதி.A. சம்மனஸ் மேரி, திரு.A. ஜோசப் ஆசீர்வாதம், திரு.A. மகுடீஸ்வரன், திரு.ஜேம்ஸ்.P. ரவிக்குமார், திருமதி. திருவாசகி, திருமதி. ஜான்சி தினா, திரு.S. கிருஷ்ணமூர்த்தி, திருமதி.V. சுவேகா, திரு.M. ஞானசேகரன், திரு. ஜெயராமன், திரு. கிறிஸ்டோபால் கணேஷ், திரு.B. ஹெமின், திரு. ஜாம்சுவான்பாவ் சுந்தாக், திரு. T.S. தெங்கோலுன் ஹோகிப் ஆகியோரின் பயணப் பாதுகாவலுக்காக, குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

**பணித்தளங்களின் பொறுப்பாளர்கள்**

வடஇந்திய அருட்பணியாளர்களுக்கான சிறப்புக்கூட்டம் நடைபெற்றதற்காகத் துதிப்போம். அருள்திரு.V. இம்மானுவேல் பாண்டி (தென்னிந்திய பணித்தள உதவி இயக்குநர்), திரு.C. ராஜரத்தினம் (சொத்து பராமரிப்பாளர்), திரு. தாங் பாவ் ஹோகிப் (வடஇந்தியப் பணித்தள ஒருங்கிணைப்பாளர்) ஆகியோருக்காக ஜெபிப்போம்.

**மே-15**

**மொழிபெயர்ப்புப் பணி**

மொழி பெயர்ப்பாளர் திருமதி. ஷீலா நாகராஜனுக்குத் தேவையான ஞானம் கிடைக்க, மொழி பெயர்ப்பு உதவியாளர்கள் திரு.சுக்மன் மாத்லாம், திரு.சுக்மன் பொட்டாய், செல்வி.மங்கள்தாய் ஆகியோருக்காக, நடைபெற்றுவரும் பழைய ஏற்பாட்டு மொழி பெயர்ப்பு விரைவில் முடிவடைய, யாத்திராகமம் மற்றும் சங்கீதம் ஆகிய மொழி பெயர்ப்பின் ஆய்வுப்பணிகள் நல்லமுறையில் நடைபெற, கோண்டி மொழி "ஆடியோ வேதாகமம்", தேவையான கோண்டி மக்களுக்கு விரைவில் கிடைக்க ஜெபிப்போம்.

**தலைமை அலுவலகம்**

நிதித்தேவைகள் சந்திக்கப்பட்டு வருவதற்காகத் துதிப்போம். அலுவலகத் தேவைகள் சந்திக்கப்பட, பொதுச் சேவகருக்கு இயக்கத்தை நடத்தத் தேவையான ஞானம், பெலன், வழி நடத்துதல் கிடைக்க, பொதுச்சேவகர் அருள்திரு.S. டேவிட் சாலமோன், அருள்திரு.G. பொன்னுராஜ், திரு.A. சாம் டென்சிங், திரு.A. ஆஷிஸ், திரு.Y. பிரான்சிஸ் ராஜா, திரு.V.S. தம்பிராஜ், திரு.S. ஞானசேகர், திரு.A. பிரபாகரன், திருமதி. ஜான்ஸி ஜெய கிருபா, திரு.D. சைமன், திருமதி. சாரா ஜான், திருமதி. மேக்டலின் சிநேகவதி ஆகியோருக்காக ஜெபிப்போம்.

**வளரும் விண்ணரசு**

இம்மாதம் இதழ் வெளியிடப் பட்டதற்காக, இதழின் தேவைகள் சந்திக்கப்பட்டதற்காகத் துதிப்போம். இதழில்

வெளியிடப்படும் கட்டுரைகள் வாசகர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்க, இதழ் வாசகர்கள் விரும்பும்வண்ணம் வெளியிடப்பட, புதிய வாசகர்கள் கிடைக்க ஜெபிப்போம்.

**மே-16**

**நிறுவனர்கள்**

டாக்டர். N.J. ஞானையா மற்றும் திருமதி. ரஞ்சினி ஞானையா ஆகியோருக்காக, இருவருக்கும் நிறைவான சுகம் கிடைக்க, நிறுவனரின் எழுத்துப்பணி மற்றும் அருட்பணி ஊழியங்களுக்காகவும், திருமதி. ரஞ்சினி ஞானையா அவர்கள் பெண்கள் நடுவிலும், வேதபாட வகுப்புகள் மூலமும் செய்து வரும் அருட்பணி களுக்காகவும் ஜெபிப்போம்.

**நிர்வாகம்**

செயற்குழு உறுப்பினர்கள் திரு. J. எபிநேசர் மார்டின், Dr. S. அருண், திரு. K ஜான்சன், திரு. P. கோபால கிருஷ்ணன், Dr. தினகரன் ரிச்சர்ட், திரு. J.E. பால் ஆபிரகாம், திரு. வெஸ்லி ஜோயல் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

**இறையியல் கல்வி**

இறையியல் கல்வி பயிலும் 17 பேருக்காகத் துதிப்போம். சுரேந்திரா காவ்டே, திபேஷ் சலாம், உபேஷ் சலாம், ரமேஷ் வாடே, ராம்நாத் வாடே, லலிதா கருங்கா, சுனிதா வாடே, ரஜினி சலாம், சுக்யாரின் மண்டாவி, அஷ்வந்தி கச்லாம், சவிதா நுரெட்டி, சத்தியசீலன், ரெஜினா மேரி, ரேணுகா, ராஜ்மன், சோம்சிங், நெதன்லங் ஆகியோர் சிறப்பான முறையில் இறையியல் கல்வி கற்றுத் தேற ஜெபிப்போம்.

**புலம்பெயர்ந்தோர் அருட்பணியாளர்:**

**கன்னியாகுமரி மாவட்டம்**

**அருட்பணியாளர்:**
**திரு. ஓமெந்திராகுமார்**
**திருமதி. சவீத்தா குமாரி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட நாகர்கோவில், கம்பிபாலம், ஆசாரிபள்ளம், பறக்கை, தெங்கம்புத்தூர், பட்சேரி, ராமன்புத்தூர், கோணம், சைமன் நகர், பார்வதிபுரம் ஆகிய பகுதிகளுக்காக, விகாஷ் பிஹாரி பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதற்காக-இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, ஷிவ்தார், சிருஷ்டி ஆகியோர் சுகம் பெற்றதற்காக-ஆராதனையில் கலந்து கொள்வதற்காகத் துதிப்போம். பத்ரிநாத், ராம் ஆகியோர் விசுவாசத்தில் வளர, ராஜ்குமார் மீண்டும் ஆராதனையில் கலந்து கொள்ள, மகேஷ் போதைப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**பிற கிறிஸ்தவர்களோடுள்ள சகவாசத்தை விசுவாசியொருவன் துண்டித்துக்கொள்ளும்போது, பிசாசுக்கு புன்முறுவல் வருகிறது. விசுவாசியாக அவன் திருமறையைத் தியானிப்பதை நிறுத்தும்போது, பிசாசுக்கு ஒரே சிரிப்பு. அவன் ஜெபிப்பதை நிறுத்தும்போது பிசாசு ஆனந்தத்தால் ஆர்ப்பரிக்கிறான்.**

கோரி டென்பூம்

**நடத்தைக்கேடு அல்லது ஊழல் போன்றவற்றைவிடப் பிசாசின் தூண்டுதலால் ஒருவரையொருவர் குற்றம் சாட்டுவதாலேயே அநேகச் சபைகள் சின்னாபின்னமாகின்றன. அடுத்தவர் மீது குற்றம் கண்டுபிடிப்பதே ஓர் ஊழியம் என்று உயர்த்தப்படுமளவு சமுதாயம் சீர்குலைந்திருக்கிறது.**

பிரான்சிஸ் பிராங்கிபைன்.

## ICGM வங்கி கணக்கு விபரங்கள்

### அருட்பணியாளர் உதவி மற்றும் பொதுவான காணிக்கைக்காக

Account Name : INDIA CHURCH GROWTH MISSION
Account Number: 10143136773
Bank : State Bank of India
Branch Name : Selaiyur, Chennai-73
IFSC Code : SBIN0007948

icgm1014@sbi

### ஆலயக் கட்டிட நிதிக்காக

Account Name : INDIA CHURCH GROWTH MISSION
Account Number: 11194454531
Bank : State Bank of India
Branch Name : Vinayaganagar, Madurai.
IFSC Code : SBIN0001479

### பத்திரிக்கை ஊழியத்திற்காக

Account Name : IRAI ARASU TRUST
Account Number: 10143136762
Bank : State Bank of India
Branch Name : M.K. University, Palkalai Nagar.
IFSC Code : SBIN0002235

மேலேயுள்ள QR கோடை பயன்படுத்தியும் அல்லது வங்கி மூலமாகவும் காணிக்கைகளை அனுப்புபவர்கள், அவ்விபரங்களை நமது அலுவலகத்திற்கு SMS/Whatsapp மூலமாக 94459 24440 என்ற எண்ணுக்கும் அல்லது கடிதம் மூலமாகவும், தகவல் அனுப்பினால், உங்களுக்கு ரசீது அனுப்ப உதவியாயிருக்கும் நன்றி.

**வளரும் விண்ணரசுவுக்கு சந்தா செலுத்தி பத்திரிக்கை ஊழியம் சிறக்க உதவுங்கள்**

## வட இந்தியா

மே-17

**அருட்பணியாளர்கள்:**
**திரு. லல்துராம் சலாம்.**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாலர்மேடா, கோர்காவ், முல்லே, தெலன்கா, போல்பா, கானாகாவ், மாட்டலா ஆகிய கிராமங்களுக்காக, மங்து பொட்டாய் சுகம் பெற்றதற்காக, சோமரு சலாம் குடும்பமாக விசுவாசத்தில் வளருவதற்காகத் துதிப்போம். மத தீவிரவாதிகளால் நற்செய்தி அறிவிக்கும் பணி தடைபடாமலிருக்க,வந்தனா காவ்டே, கோலே காவ்டே ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. ராம்பொரஸ் போயாம்**
**திருமதி. சங்கீதா போயாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கொங்கேரா, பூஜாவாகி, மலேச்சூர், சாந்தி நகர், கோய்லிபேடா ஆகிய கிராமங்களுக்காக, பூஜாவாகி கிராமத்தினர் பாடுகளின் நடுவிலும் விசுவாசத்தில் வளருவதற்காக, பஜானி சுகப்பிரசவத்தில் குழந்தை பெற்றதற்காகத் துதிப்போம். ஞானதி பொட்டாய், ராஜ்மதி குழந்தை, ரமேஷ் கொர்ரம், ஊழியர் ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சந்து சலாம்**
**திருமதி. சோன்பத்தி சலாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட போர்காவ், குருஸ்நார், படே ஜம்ரி ஆகிய கிராமங்களுக்காக, விக்கிக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். இறையியல் கல்லூரியில் பயிலும் விசுவாசிகள் நல்லமுறையில் படிக்க, விசுவாசிகள் விசுவாசத்தில் வளர, தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

மே-18

**அருட்பணியாளர்:**
**திரு. மங்கலு மாத்லாம்**
**திருமதி. சுசீலா மாத்லாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாட்பால், ஷியாநார், பூசுவால் ஆகிய கிராமங்களுக்காக, ரனோதி, ரெனி ஆகியோர் சுகம் பெற்றதற்காக, சோனா, சாந்தி, சந்தன் ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். சோனாவின் குடும்பம், சனந்தர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. கஸியா துக்கா**
**திருமதி. ரூப்பாய் துக்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஜாக்ரி, அமாஸாரா, கோகுடா, மிஸ்ரி, போங்காபால், ஆத்வால் ஆகிய கிராமங்களுக்காக, ராஜேஷ்குமார் குடும்பமாக இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். ஜான்கி, மல்சாய் வட்டே, பவன்பதி, சரிதா ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சாது துக்கா**
**திருமதி. ரசாய் துக்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஆம்காவ், சிப்ரேல், மஸ்பூர், தெர்தூல், தாடோநார், தாடோபால் ஆகிய கிராமங்களுக்காக, மனோஜ் துக்கா, மோனிகா, கஸ்னி துக்கா ஆகியோருக்கு சுகம் கிடைத்ததற்காகத் துதிப்போம். மாங்குராம் காடி, கல்சி ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, ஜினுராம் துக்கா, மனோராம் துக்கா, மணிராம் துக்கா, ரஜினி ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

மே-19

**அருட்பணியாளர்:**
**திரு. புத்சிங் வட்டே–**
**திருமதி. ரெய்னி வட்டே**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஓங்நார், மட்டாவண்ட், மாத்லா, ஏதேம்பால் ஆகிய கிராமங்களுக்காக, சபை விசுவாசிகள் அனைவரும் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். மூத்த விசுவாசிகள் அனைவருக்கும் நிறைவான சுகம் கிடைக்க, விசுவாசிகள் விசுவாசத்தில் வளர, தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. ஜ⁻ுகுல் சலாம்**
**திருமதி. சொனாரி சலாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சாந்தாகாவ், படே ஜம்ரி, சோனாபால், பாக்பேடா, கிதும்பேடா, சிர்பூர் ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். பிரிஜ் பட்டி, ரூகாய், மாங்னி ஆகியோர் நிறைவான சுகம் பெற, கோடை விடுமுறை வேதாகமப் பள்ளி சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. தஸ்ரு பொட்டாய்–**
**திருமதி. ஜெய்மதி பொட்டாய்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாவ்டி, கோட்லி, பூஜாவாகி ஆகிய கிராமங்களுக்காக, நானிராம் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். நற்செய்தி அறிவிக்க திறந்த வாசல் கிடைக்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, கோடோலி கிராமத்தில் ஒற்றுமை உண்டாக ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**செல்வி. கசினி துக்கா**

## மே-20

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மொடேங்கா, பல்னா, சிங்னார், பலோடா பூட்டான் சாந்தாகாவ், உடித்காவ் ஆகிய கிராமங்களுக்காக, ராம் ஷீலா சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். விசுவாசிகள் விசுவாசத்தில் வளர, வாலிபர்கள் ஊழியரோடு இணைந்து ஊழியம் செய்ய, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு.தேசிராம் வட்டே–**
**திருமதி. ரானோ வட்டே**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட காராவாண்ட், மூஞ்மெட்டா, சிவ்னி, திம்நார், பல்போட்பாரா, ஜோட்டா பாரா ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். கோட்காவ் கிராமத்தில் நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. ஜக்நாத்குமிட்டி–**
**திருமதி. சுக்கோ குமிட்டி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பிடுகாபேடா, பரண்டா, கேராபட், ஜோட்டே, ஜெய்பூரி ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். இந்த கிராமங்களில் நற்செய்தி அறிவிப்பதற்கும்–ஆராதனை நடத்துவதற்கும் உள்ள தடைகள் விலக, காயத் படேல் இரட்சிக்கப்பட, சுவீகரோ குழுவின் மூலம் பிரச்சனைகள் தீர்க்கப்பட, ஹிம்சு சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு.லட்சு கருங்கா**
**திருமதி. புல்தாய் கருங்கா**

## மே-21

நற்செய்தி அறிவிக்கப்பட்ட போர்பால், கட்காகாவ், கொர்ரா, இருக்கோ, சீண்டுபாரா, ஈத்கஜா ஆகிய கிராமங்களுக்காக, ராஜ்மன் கொர்ரம் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக– விசுவாசத்தில் வளர்வதற்காக, சீதா, லட்சுமி பொட்டாய் ஆகியோர் சுகப்பிரசவத்தில் குழந்தை பெற்றதற்காகத் துதிப்போம். தேவந்தி, சன்வாரி குமிட்டி, பிரதிக்யா, சுசீலா துக்கா ஆகியோர் நிறைவான சுகம் பெற, அம்மாய், ஜகதாம்பா காவலி ஆகியோருக்கு சுகப்பிரசவம் கிடைக்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சன்னு துக்கா**
**திருமதி. மனிஷா துக்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மார்க்கபேடா, மூங்மேடா, காப்சி, மாலிங்நார் ஆகிய கிராமங்களுக்காக, கீதா சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். ராம்தாய் இரட்சிக்கப்பட, மரக்கபேடா விசுவாசிகள் ஒற்றுமையாக ஆவிக்குரிய வாழ்விலும், எண்ணிக்கையிலும் வளர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**செல்வி. ராம்தாய் குமிட்டி**
**செல்வி. சொகாய் கருங்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மட்டாவாண்ட், நாராயண்பூர், கொர்ரா, பரல்பட் ஆகிய கிராமங்களுக்காக, சோம் உசெண்டி, யமாய் துக்கா ஆகியோர் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, ஷியாபதி மண்டாவி சுகம் பெற்றதற்காக, பிஸ்ரி துக்காவுக்கு சுகப்பிரசவம் கிடைத்ததற்காகத் துதிப்போம். சிர்காய், ஜகநாத் பையா, ரங்கோலி, சுக்கியாரி ஆகியோர் நிறைவான சுகம் பெற, லட்சுமி, ஆய்தே ஆகியோர் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, ராஜ்பதி துக்காவுக்கு சுகப்பிரசவம் கிடைக்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**செல்வி. கோத்தாய் பொட்டாய்**
**செல்வி. பஜாரி கருங்கா**

**மே-22**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட வேத்மாகோட், மண்டோகி, மொரஸ்கோடா, பரஸ்காவ் ஆகிய கிராமங்களுக்காக, அஸ்மதி கச்லாம் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, கோத்தாய் பொட்டாய், மகேந்திரா ஆகியோருக்கு கிடைத்த சுகத்திற்காக, டிம்பிள் கல்லூரித் தேர்வில் வெற்றி பெற்றதற்காகத் துதிப்போம். சுக்லி, மங்காய் ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, ரவி, சுஜன், சுமன் ஆகியோர் தேர்வில் வெற்றி பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. பஜ்நாத் சலாம்**
**திருமதி. சொனாரி சலாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குட்ரபாரா, ரேமாவாண்ட், பாத்ரூடண்ட் பாரா, சாந்தி நகர், கரஞ்சிபாடா ஆகிய கிராமங்களுக்காக, ராஜேஷ் கோடா சுகம் பெற்றதற்காக, பால்சாய் வாடே காவலராக தேர்ச்சி பெற்றதற்காகத் துதிப்போம். ஜாயங்கே, ஆராம், சந்தேர் ஆகியோர் நிறைவான சுகம் பெற, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திருமதி. தன்பத்தி பொட்டாய்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கோகுடா, ரேமாவண்ட், நயானார் ஆகிய கிராமங்களுக்காக, ராஜ்பதி இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. லால்சாய் பொட்டாய்**
**திருமதி. சீத்தா பொட்டாய்**

**மே-23**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கோங்லா, ஸாரா, முஸ்குடும், முண்டுபால் ஆகிய கிராமங்களுக்காக, சாஹித் வாடே சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. மான்சிங் கச்லாம்**
**திருமதி. சுல்மதி கச்லாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட படே ஜம்ரி, கோங்லா, ஸாரா, முஸ்குடும், முண்டுபால், மட்மனார் ஆகிய கிராமங்களுக்காக, சன்வா சலோமின் மகன் சுகம் பெற்றதற்காக– குடும்பமாக இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, புலி தாக்கியும் காயமின்றி தப்பிய சக்தேவ் பொட்டாய்காக, சுமா பொட்டாய்க்கு சுகப்பிரசவம் கிடைத்த தற்காகத் துதிப்போம். சுரேஷ் கச்லாம், ராகுல், ரமேஷ், நரேந்திரா குஜம் ஆகியோர் இரட்சிக்கப்பட, ஜங்கதயா கச்லாம், துல்பதி கச்லாம் (அறுவைச் சிகிச்சை) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. சந்துராம் வட்டே**
**திருமதி. சுகோந்தின்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கங்கால், கர்மாரி, தாடோநார், மரக்கபேடா ஆகிய பகுதிகளுக்காக, ராஜ்மன் கொர்ரம் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, ஹிமன்சு கோடா, மஷில் (விஷப்பூச்சிக்கடி) ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். சந்தோஷ் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. சுக்தேவ் குமிட்டி**

**மே-24**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கோர்நர், தெலங்கா ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். சோமரு பொட்டாய் குடும்பமாக விசுவாசத்தில் வளர, சோமரு மரப்பி குடும்பத்தினர் பாதுகாக்கப்பட, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சுக்ராம் சலாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஆமசாரா, மட்டாவாண்ட், ஜம்ஹரி, சிங்நார், மரக்கபேடா ஆகிய பகுதிகளுக்காக, பாடுகளின் நடுவிலும் விசுவாசத்தில் நிலைத்து நிற்கும் தர்மதாய் யாதவுக்காக, மனாய் சுகம் பெற்றதற்காக, ஜூம் செயலி மூலம் நற்செய்தி அறிவிக்கப்படுவதற்காகத் துதிப்போம். மனாய் உய்கே, ஜெய்மன் கோடா (தோல் நோய்) ஆகியோர் நிறைவான சுகம் பெற, நற்செய்தி அறிவிக்கவுள்ள தடைகள் விலக ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**செல்வி. சன்பதி காவ்டே**

தெலங்கா, பாலார், மெட்டாமில்லி ஆகிய இடங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டு வருவதற்காக, லச்னி இயேசுவை ஏற்றுக்

கொண்டதற்காக, வந்தனா, லகாய் ஆகியோர் சுகம் பெற்று வருவதற்காகத் துதிப்போம். பிவனேஷ்வரி, மங்காய் ஆகியோருக்கு சுகப்பிரசவம் கிடைக்க, கமல்பதிக்கு திருமணம் நடைபெற, ரனாய் மனநோயிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**மே-25**

**அருட்பணியாளர்:**
**திரு. சொனாரு கொர்ரம்**

பிர்சிங் கொர்ரம் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, காட்பிந்து பகுதியில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். ரஜே பொட்டாயின் கணவர்– பிள்ளைகள் போதைப் பழக்கத்திலிருந்து விடுதலை பெற, வாலிப விசுவாசிகள் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சுரேஷ் பவசாகர்**

மோகன் தண்டி இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, நயா காவ்ன்,அம்பலி படுர், படேரா பாலி, குசுரு பகெல் ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். மாலா வந்தி, சுமதி ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, நரேஷ் ஹாவ்ல் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. ரோஹித் பவசாகர்**

விஜய் தண்டி போதைப் பழக்கத்திலிருந்து விடுதலை பெற்று– இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, ராகேஷ் நாக், ஜோதி பவசாகர் ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். மதமாற்றத் தடைசட்டம் நீக்கப்பட, டோரசின்கா கிராமத்தில் தண்ணீர் பிரச்சனை தீர்க்கப்பட ஜெபிப்போம்.

**மே-26**

**மத்திய இந்தியா - மகாராஷ்டிரா**

**அருட்பணியாளர்:**
**திரு. க்யானேஷ் லால்பகதூர் தாக்குர்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பிரபாகத் கீதம் சுகம் பெற்றதற்காக, கர்வா, படாடி, பாபுபேட், அகர்ஜாரி, அடேகாவ், ஜுனோனா, பத்மாபூர் ஆகிய இடங்களுக்காக, ராஜு சௌத்ரி இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். மாலைநேர வகுப்பில் கலந்து கொள்ளும் மாணவர்கள் இரட்சிக்கப்பட, விசுவாசிகள் விசுவாசத்தில் வளர, ஜுனோனாவில் ஆலயம் கட்டப்பட ஜெபிப்போம்.

**மத்தியப் பிரதேசம்**

**அருட்பணியாளர்:**
**திரு. சந்தோஷ் பகெல்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட முர்பா, தண்டர் ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**ஜார்கண்ட் மாநிலம்**

**அருட்பணியாளர்:**
**திரு. குந்தர் பகெல்–திருமதி. மம்தா பகெல்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட டாடாபானி, பயாக்குரா, பாண்ட்ரியா, ராமானுகஞ்ச், நாக்ரா, கஜுரி ஆகிய கிராமங்களுக்காக, அனுரஞ்சன் குஜார் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். பயாக்குராவில் உள்ளவர்கள் போதைப் பழக்கத்திலிருந்து விடுதலை பெற, பிரபுல் மிஞ்ச், மனோஜ் காஹா, பிரஞ்சல் ஆகியோர் இரட்சிக்கப்பட, சுனிதா விசுவாசத்தில் வளர, ஆலயக்கட்டுமானத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

**மே-27**

**அருட்பணியாளர்:**
**திரு. மங்கள் மராண்டி**
**திருமதி. சுகாஜினி சௌரேன்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ராம்பூர், குஸ்சிரா, கேட்பாந்தா ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். பாபுராம், மோட்சில் ஆகியோர் இரட்சிக்கப்பட, விசுவாசிகள் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

## உத்தரப்பிரதேசம்

**(அவாதி, மிஸ்ரா, ராஜ்புத், கௌதம், தாக்கூர், சௌகான், சௌத்ரி–ஆகிய மக்கள் கூட்டத்தினர்)**

**அருட்பணியாளர்: திரு. ராம்ஜியவான்**
**திருமதி. ராஜ்லட்சுமி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பிஸ்வா, இஸ்பாபூர், மதன்பூர், மெய்பத்பூர், சரெய்யா, மூரத்பூர், ஜம்பா, பூடான்பூர், பிஜென்டா, படாய்பூர், கங்காபூர், மடியாவா, ஜான்பூர், கினோத்தி ஆகிய கிராமங்களுக்காக, வினீத் குமார், ஷுபம் குமார் ஆகியோர் திருமுழுக்கு பெற்றதற்காக, தீபக், ராமன் (மூளைப்புற்று

நோய்), ஊர்மிளாதேவி (பக்கவாதம்) ஆகியோர் சுகம் பெற்று வருவதற்காகத் துதிப்போம். விபத்தில் பாதிக்கப்பட்ட அங்கிட் நிறைவான சுகம் பெற, ராகேஷ், பங்கஜ் குமார், சரோஜ், விகாஸ், ஆகாஷ் ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. மிதிலேஷ்குமார்-**
**திருமதி. சுனித்தா தேவி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பக்கரியாஹர், மூடா, சுத்தரி, குச்சல்ஹா, ஹரெய்யா, லங்கடிபூர், ஹசரியா, கோலா, காவேல்பூர், மாட்டாபூர்வா, மஜ்ரா, சிரெய்ஜா, சுர்ஜி பூர்வா, கூஷ்மௌரி, திங்கூர் பூர்வா, மாணிக்பூர் ஆகிய கிராமங்களுக்காக, பைத்யாநாத் போதைப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றதற்காக- இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, அனுஜ், ஆதர்ஸ், ஓம்கார், குணா ஆகியோர் ஆராதனையில் கலந்து கொள்வதற்காக, பப்லு தேவி, கிரந்தி ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். லஜ்ஜாவதி, குசும் தேவி, கஜல் ஆகியோர் சுகம் பெற, சஞ்சய், பாஞ்சி ஆகிய குடும்பங்கள் இரட்சிக்கப்பட, ஷிவம் நிறைவான சுகம் பெற ஜெபிப்போம்

**ஆந்திரா மாநிலம் (தென்னிந்தியா)**

**அருட்பணியாளர்:**
**திரு. வெங்கடேஸ்வரலு**
**திருமதி. கடம் புஷ்பம் குமாரி**

**மே-28**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கானூரு சென்டர், நாயுடுபேட்டா மற்றும் டொட்டலவாரிமிட்டா ஆகிய கிராமங்களுக்காக, 40 நாட்கள் உபவாச ஜெபம் நடைபெற்றதற்காகத் துதிப்போம். ரமணய்யா, சாய் ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. பால் வீரமணி**
**திருமதி. பெல்சியா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சென்னாரெட்டி கன்ரிகா, பெரிகுலப்பாட்டி கன்ரிகா, அன்னமேடு சென்டர், கானூரு சென்டர், டொட்டலவாரிமிட்டா ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். நானி, ரவி, ஹரி ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. உதய்குமார்**
**திருமதி. பிரசன்னா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சிந்தாரெட்டிபாளம், வெங்கடரெட்டி காலனி, ராஜீவ் காந்தி காலனி ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். பிரசாந்த், ரவி, ஹரி ஆகியோர் இரட்சிக்கப்பட, புதிதாக ஆராதனையில் கலந்து கொள்ளும் இஸ்லாமியர்கள் இயேசுவை அறிந்து கொள்ள, கோடைவிடுமுறை வேதாகமப்பள்ளி சிறப்பாக நடைபெற- அநேகப் பிள்ளைகள் கலந்து கொள்ள- தேவைகள் சந்திக்கப்பட, இசைக்கருவிகள் வாங்கப்பட, பிள்ளைகளின் கல்வி கட்டணத் தேவைகள் சந்திக்கப்பட, ஊழியர் மற்றும் ஊழியருடைய தந்தையின் சரீர சுகத்திற்காக ஜெபிப்போம்.

**மே-29**

**அருட்பணியாளர்:**
**திரு. பத்தலா மதுசுதாகர்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பெரிமிடி, துவாரகாபுரம் ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். குருவையா, பீகி, சுப்ரமண்யம், வெங்கடேஷ், ஜனார்த்தனன்,லட்சுமி ஆகியோர் இரட்சிக்கப்பட, ஜானகி, பபுலு, மார்த்தம்மாவின் கணவர், ஊழியர்- ஊழியரின் மனைவி ஆகியோர் நிறைவான சுகம் பெற, ஷிரவாணிக்கு விரைவில் திருமணம் நடைபெற ஜெபிப்போம்.

**கர்நாடக மாநிலம் - தேவனஹள்ளி(தென்னிந்தியா)**

**அருட்பணியாளர்:**
**திரு. சாமுவேல் பிரபாகர்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாகேபள்ளி, சோளதேவனஹள்ளி, சாந்தி

நகர் ஆகிய பகுதிகளுக்காக, நற்செய்திக்கு ஆர்வம் காட்டும் கோவிந்தப்பாவுக்காகத் துதிப்போம். ராஜப்பா, ரேணுகா ஆகியோர் இரட்சிக்கப்பட, பிரகாஷ், நாகம்மா ஆகியோர் நிறைவான சுகம் பெற ஜெபிப்போம்.

### ஒடிசா

**அருட்பணியாளர்:**
**திரு. அப்பொல் மண்டல்**
**திருமதி. சுமித்ரா மண்டல்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ரெங்காபதி, கஞ்ச்பாரா, குபுடாடிதி, நியுபாரா, ராணிபதேர், குன்கி பாரா, துமார்திதி ஆகிய கிராமங்களுக்காக, ரஞ்சிதா சுகம் பெற்றதற்காக, கைலாஷ் போதைப் பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றதற்காகத் துதிப்போம். ரெங்கவதி கிராமத்தில் ஜெபக்கூட்டம் ஆரம்பிக்கப்பட, வீணா மூளைப்புற்று நோயிலிருந்து நிறைவான சுகம் பெற, பூர்ணோ சந்திரா இறையியல் கல்லூரியில் சேர்ந்து படிக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திருமதி. ஜானகி மாஜி**

**மே-30**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சிமிலி குடா, பாப்லி, கபித்தா, நாகூல், மான்பார், குமரகுடா, பானுவா குடா ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. லெலன் தௌங்கல்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஜாம்தர்குரா, பேலாபட், கும்தாரா ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். ஞாயிறு ஆராதனை, உபவாச ஜெபம், வீட்டுக்கூட்டம் ஆகியவை தொடர்ந்து நடைபெற, வேதபாட வகுப்பு, புதிய ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

### (வடகிழக்கு மாநிலங்கள்)

**அருட்பணியாளர்:**
**திரு. தர்மேந்திரா தெப்பர்மா**
**(மே. திரிபுரா)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கிருஷ்ணபூர் கிராமத்திற்காக, வீட்டுக்கூட்டம், உபவாச ஜெபம், வேத பாட வகுப்பு, வீடு சந்திப்பு ஆகியவை நடைபெற்று வருவதற்காகத் துதிப்போம். ராஜேந்திரா பாரா, துர்கா முரா, ஆலிவ் முரா, சிம்னா தாக்யா, ராம்சங்கர் பாரா, சொப்னா முண்டா, நிர்மல் தெப்பர்மா, தருண் மண்டா, அனிதா சர்கார், சபோன் சர்கார் ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**மே-31**

**அருட்பணியாளர்:**
**திரு. மங்லியான்லம் (வ.திரிபுரா)**

விசுவாசிகள் ஒற்றுமையுடன் வாழ, ஆவிக்குரிய வாழ்வில் வளர, ஊழியருடன் இணைந்து ஊழியம் செய்ய ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. ஹௌகௌலால் சாம்தே**
**(வ. திரிபுரா)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட டங்க பாராவுக்காக, வீட்டுக்கூட்டம், உபவாசக் கூட்டம் ஆகியவை நடை பெறுவதற்காகத் துதிப்போம். டங்கபாரா விசுவாசிகள் விசுவாசத்தில் வளர, புதிய பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. மென்டு தெப்பர்மா**
**(மே. திரிபுரா)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கங்காதான், என்.சி பாரா, ராஜேந்திர பாரா, சரத் சதுரி பாரா, பேலஜா பாரா, பெலுவா பாரா ஆகிய கிராமங்களுக்காக, வீட்டுக்கூட்டம், உபவாசக்கூட்டம், வேதபாடக்கூட்டம் ஆகியவை நடைபெறுவதற்காக, நிரு போதைப் பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றதற்காக – இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். சிம்னாவில் ஆங்கிலப் பள்ளி கட்டப்பட, மண்டு தெப்பர்மா மனநோயிலிருந்து சுகம் பெற, சிம்னாவில் உள்ள விசுவாசிகள் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

ஜெப ஆவிக்கு எதிராய்ப் போராட
ஆகாயத்து அதிகாரப் பிரபு
தனது சேனைகளையெல்லாம்
அனுப்பி வைக்கிறான்.
ஆண்ட்ரூ போனர்.





# இயேசுதான் அருட்பணியின் நாயகர் !

18

Dr.N.J. ஞானையா

புனித வாரம் முடிந்து ஈஸ்டர் என்னும் உயிர்த்தெழுந்த திருநாளுக்குப்பின்னர் சாலமோன், ஜான், மாணிக்கம் ஆகிய மூவரும் சந்திக்கின்றனர். ஒருவருக்கொருவர் "ஈஸ்டர் வாழ்த்துக்களை"த் தெரிவிக்கின்றனர்.

**சாலமோன்**: இன்று நாம் படிக்கப்போகும் காரியம்தான் இதுவரை நாம் பார்த்தவற்றின் ஓர் உச்சக்கட்டம் என்று கூறலாம். உயிர்த்தெழுந்த திருநாளுக்குப்பின், அது மிகவும் பொருத்தமானதாகவும் உள்ளது.

**ஜானும் மாணிக்கமும்**: இன்று என்ன படிக்கப்போகிறோம்?

**சாலமோன்**: இயேசுதான் அருட்பணியின் நாயகர். அவருடைய வாழ்வும், செயல்களும்தான் அருட்பணிக்கு அடித்தளமே. முதலில் இயேசு யார் என்ற கேள்வி அன்றிலிருந்து இன்றுவரை கேட்கப்படும் ஒன்று. அதிலிருந்து நாம் தொடங்கலாம்.

**மாணிக்கம்:** இந்திய நாட்டில் இயேசுவை ஒரு நல்ல போதனைகள் கொடுத்த ஆசிரியராக ஏற்றுக்கொள்ளுகிறார்கள். சமுதாயத்தை மாற்றும் அறிவுரைகள் கொடுத்த ஒரு போதகராகவும், குருவாகவும் கருதுகின்றனர்.

**ஜான்:** ஒரு சிலர் அவரை அவதாரம் (Incarnation) என்றும் கருதுகிறார்கள். இந்து மதத்தின் ஒரு பிரிவான வைணவத்தில் அவதாரங்கள் பற்றிய கொள்கைகள் உண்டு என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதுபற்றிச் சொல்லுங்கள்

**சாலமோன்**: பரிணாம வளர்ச்சி (ஆங்கிலத்தில் Evolution) என்னும் கொள்கைக்கு ஏற்ப "கடவுள்" பல அவதாரங்களில் வந்தார் என்னும் கருத்து அது. 10 அவதாரங்களை அது கூறும். அதில் 9 இதுவரை நடந்துள்ளதாம் . 10 ஆவது அவதாரம் இனிமேல் நடக்குமாம் !



**மாணிக்கம்:** எனக்கு இரு அவதாரங்கள் பற்றி மட்டுமே தெரியும். ராமரும் , கிருஷ்ணரும். மற்றவை என்ன?

**சாலமோன்**: மச்சம் (மீன்),கூர்ம (ஆமை), வராக (காட்டுப்பன்றி), வாமன (குள்ள மனிதன்), பரசுராமன் (கோடரி வீரன்), புத்தர் (சிலர் பலராமன் என்றும் கூறுவர்). இனி வரும் அவதாரம் கல்கி! ஆனால், ஒன்றை நாம் மறந்துவிடக்கூடாது. இவைகள் மனிதரால் ஏற்படுத்தப்பட்ட (எழுதப்பட்ட) புராணக் கதைகள் (mythologies). உலகின் பல பகுதிகளிலும் இப்படிப்பட்ட புராணக் கதைகள் உண்டு. கிரேக்கர்கள், சீனர்களின் கதைகள் சில எடுத்துக்காட்டுக்கள். ஆனால், இயேசுவின் அவதாரம் உண்மை வரலாறு. கதைகளை யாரும் எழுதலாம். அது மனித முயற்சி. ஆனால், வரலாறு உண்மையில்

நடந்தது. நமக்கு நன்றாய்த் தெரிந்த யோவான் 1:1–2, 14 வசனங்களை ஜான் வாசிப்பாயா?

**ஜான்:** (வேகமாக வேதத்தைத் திறந்து) ஆதியிலே வார்த்தை இருந்தது – அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது; அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். (14ஆம் வசனம்) அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம்.

**மாணிக்கம்:** திருவிவிலியத்தில் யோவான் 1:14 இப்படி உள்ளது. நான் அதை வாசிக்கிறேன்: "வாக்கு மனிதர் ஆனார்; நம்மிடை குடிகொண்டார்; அவரது மாட்சியை நாங்கள் கண்டோம்"

**சாலமோன்**: இயேசுவின் பிறப்பு, வாழ்வு, மரணம், உயிர்த்தெழுதல் இவை எல்லாம் உண்மையாக நடந்தவை. அதுதான் நல்ல செய்தி. உலகம் முழுவதும் கடவுளைப்பற்றிய கற்பனைகள் உண்டு. ஆனால், நம் கையில் உள்ள "வெளிப்படுத்தப்பட்ட வேதாகமத்தில்" ஓர் அற்புத வரலாறு உள்ளது. கடந்த பல வாரங்களாக "தோட்டத்தில் தொடங்கிய நற்செய்தியைக்" கொஞ்சம் கொஞ்சமாகக் கற்று வருகிறோம். அதை எப்படி நீங்கள் விளங்கியிருக்கிறீர்கள்?

**ஜான்:** கடவுளால் படைக்கப்பட்ட மனிதன் கடவுளிடமிருந்து (பிசாசின் திட்டத்தாலே) பிரிக்கப்பட்டாலும், கடவுள் மனிதனைத் தன்னுடன் இணைக்கும் முயற்சியைத் தொடங்கினார். ஒரு மாபெரும் "மீட்புத்திட்டத்தை உருவாக்கினார்".

**மாணிக்கம்:** இயேசு என்னும் மீட்பர் வருவார் என்று முன்னுரைக்கப்பட்ட அந்த திட்டம், அவர் வருகையால், வாழ்வால் நிறைவேறிற்று. கடந்த வாரம் புனிதவாரம். அவர் பாடுகளை, மரணத்தை, உயிர்த்தெழுதலை நினைவுபடுத்தியது. சிலுவையும், உயிர்த்தெழுதலும் கதைகள் அல்ல – வரலாற்றில் நடந்தவையும், வரலாற்றை மாற்றி அமைத்தவையுமான உண்மை வரலாறுகள்.



**சாலமோன்**: மிக அருமையாக இருவரும் பதில் சொன்னீர்கள். இயேசு என்னும் "தனிச்சிறப்பான அவதாரம்" (Unique Incarnation) தான் நல்ல செய்தி. கலாத்தியர் 1:7இல் "வேறொரு சுவிசேஷம் (நல்லசெய்தி இல்லையே" என்று பவுல் ஆணித்தரமாகக் கூறுவது கவனிக்கவேண்டிய ஒன்று. கலாத்தியர் 45இல் "காலம் நிறைவேறிய போது தம் குமாரனை தேவன் உலகை மீட்க அனுப்பினார்" என்னும் வசனமும் வரலாற்றில் வந்த இயேசுவைக் கூறுகிறது.

**ஜான்:** மிக நல்ல கருத்து. புராணக்கதைகள் கற்பனை அல்லது மனித முயற்சி – வரலாறு உண்மை. ஆனால், வரலாற்றில் வந்த, மதங்களை உருவாக்கின மதத்தலைவர்களுடன், சிலர் இயேசுவையும் ஒப்பிடுகிறார்கள். சீக்கிய மதத்தை உருவாக்கிய குருனானக், இஸ்லாமைத் தோற்றுவித்த முகம்மது, புத்தமதத்தை உண்டாக்கிய புத்தர் இவர்கள் போலவே இயேசுவும் என்பது அவர்களின் கருத்து. ஒருவகையில் பல நல்ல வழிகள் உண்டு, அதில் கிருஸ்தவமும் ஒன்று என்பது அவர்களின் நம்பிக்கை. எம்மதமும் சம்மதமே என்னும் கொள்கை இன்னும் இந்தியாவில் பரவலாக உள்ளதே!

**சாலமோன்:** அந்த நாட்களில் ரோம் உலகை ஆண்டபோது "எல்லா சாலைகளும் (ரோடுகளும்) ரோமில் முடியும் - எல்லா ஆறுகளும் கடலில் கடக்கும் என்று கூறுவார்கள். மதத்தலைவர்கள் - அவர்களின் நல்ல போதனைகள் உலகில் உண்டு. யூத மதத்திலேயே 10 கட்டளைகளும் நியாயப்பிரமாணமும் இருந்தது. ஆனால், மனிதன் காப்பாற்றப்பட வேண்டுமானால் பாவத்தின்று விடுதலையடைய வேண்டுமானால், "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி" (யோவான் 1:29, 36) வர வேண்டியிருந்ததே. எபிரேயர் 7:27இல் மிகத்தெளிவாக, "அவர் தம்மைத்தாமே பலியிட்டதினால் இதை ஒரே தரம் செய்து முடித்தார்" என்று வாசிக்கிறோம்.

**மாணிக்கம்:** உலகில் பல நல்ல தத்துவங்களும் (Philosophies) இலட்சியங்களும் (Ideologies) இருக்கின்றன. அவைகளைக் கடைப்பிடித்தாலே போதும் என்று நினைக்கும் மக்களும் இருக்கிறார்கள். அதுபற்றி என்ன கூறுகிறீர்கள்.

**சாலமோன்:** "ஏட்டுச்சுரக்காய் கறிக்குதவாது" என்பார்களே. மனித முயற்சிகள் வெற்றியடைவதுபோல தோன்றினாலும், மனிதனால் அது முடியாது.

மாபெரும் பவுலடியாரே, "நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன்" என்றும், "நிர்ப்பந்தமான மனிதன் நான்" (ரோமர் 7:19,24) என்று கூறுகிறார். மனித முயற்சிகள் வெற்றிபெறும் என்றால், இயேசு வந்திருக்கவே தேவையில்லை.

ஆனால், அவர் வந்தார் - அதினாலே மனிதகுலம் முழுவதற்கும் மீட்பும் வந்தது. மாணிக்கம், அப்போஸ்தலர் 4:12 வாசிக்கிறாயா?

**மாணிக்கம்:** (திருவிவிலியத்திலிருந்து) இவராலேயன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை; ஏனென்றால் நாம் மீட்புப் பெறுமாறு வானத்தின் கீழ் மனிதரிடையே இவரது பெயரன்றி வேறு எந்தப்பெயரும் கொடுக்கப்படவில்லை.



**சாலமோன்:** இயேசுவும் இதை வலியுறுத்தி "அவராலேயல்லாமல் யாரும் பிதாவிடம் வரமுடியாது என்றும் அவரே வழியும், வாய்மையும், வாழ்வுமாயிருக்கிறார்" (யோவான் 14:6) என்று கூறியிருக்கிறார்.

மற்ற இடங்களிலும் 'நானே' (நல்ல மேய்ப்பன், வாசல், ஜீவ அப்பம், உலகின் ஒளி, உயிர்த்தெழுதல், திராட்சைச் செடி) என்றெல்லாம் கூறி, அவர்தான் ஒரே வழி என்பதை உறுதியாகக் கூறியுள்ளார். அதை நாம் மறக்கவே முடியாது - மறக்கவும் கூடாது.

அருட்பணி நாயகர் இயேசுவே என்று உணர வேண்டும், அந்த நற்செய்தியை உலகெங்கும் அறிவிக்கவும் வேண்டும். நேரம் ஆகிறது. அடுத்த வாரம் சந்திப்போம்.

**ஜானும், மாணிக்கமும்:** மிக்க நன்றி சார்.

அடுத்த மாதமும் தொடருவோம்...

**மனித முயற்சிகள் வெற்றிபெறும் என்றால், இயேசு வந்திருக்கவே தேவையில்லை. ஆனால், அவர் வந்தார் - அதினாலே மனிதகுலம் முழுவதற்கும் மீட்பும் வந்தது.**

பெண்கள் பகுதி

# தலைவனை உருவாக்கிய தலைவி "யோகெபேத்"

திருமதி. கிரேஸ் இம்மானுவேல் பாண்டி



தலைவர்கள் பிறப்பதில்லை மாறாக அவர்கள் உருவாக்கப் படுகிறார்கள். அவர்கள் சுடர்களாய் பிரகாசித்தாலும், அவர்களை உருவாக்கிய உள்ளங்கள், அவர்கள் பின்னே உண்டென சரித்திரம் சான்று பகர்கிறது.

வேதப்புத்தகத்திலும், கர்த்தரால் வல்லமையாகப் பயன்படுத்தப்பட்ட தலைவர்களுக்குப் பின்னால், தன்னலமற்ற, அர்ப்பணிப்பும், அன்பும், விசுவாசமும், ஜெபம் மற்றும் இறை வேண்டலோடு, துணிந்து செயல்படும் ஆற்றலும் மிக்க அன்னையர் பலர் இருப்பதை காண்கிறோம்.

வேதம் இவர்களை குறித்து இரத்தின சுருக்கமாய் எழுதியிருந்தாலும், அவர்களது காலகட்டத்தில், அவர்கள் கடந்து வந்த சூழ்நிலையில், அவர்கள் ஆற்றிய பணி அளப்பரியது.

பழைய ஏற்பாட்டிலே கர்த்தரை முகமுகமாய் அறிந்த, அவரால் வல்லமையாகப் பயன்படுத்தப்பட்ட தீர்க்கதரிசி மோசேயின் தாய் "**யோகெபேத்**" பற்றி காண்போம்.

**யோகெபேத் பின்னணி:**

யோகெபேத், லேவியின் குமாரத்தி. லேவியனான அம்ராமின் மனைவியுமாவார். (யாத் 2:1, 6:20) யாக்கோபின் குடும்பம் 70 பேராய் எகிப்திற்கு சென்றனர். அவர்கள் அங்கே பலுகி பெருகினார்கள். தேசம் இஸ்ரவேல் ஜனங்களால் நிறைந்திருந்தது.

யோசேப்பை அறியாத புதிய அரசன் எகிப்தில் தோன்றின போது, இஸ்ரவேல் ஜனங்கள் உபத்திரவப் படுத்தப்பட்டார்கள்.

இந்த சூழலில்தான் அம்ராம் யோகெபேத் தம்பதியினர், யேகோவா தேவனை உத்தமமாய் பின்பற்றி வாழ்ந்து வந்தனர்.

"யோகெபேத்" என்ற எபிரேய பெயருக்கு "யாவே மகிமை" அல்லது "யெகோவா அவளுடைய மகிமை" என்பது பொருள்.

கர்த்தரைக் குறிக்க பயன்படுத்தப்படும் 'YHWH' என்ற சுருக்கமான பதத்தின் முதல் பகுதியாகிய 'Yah' என்ற எழுத்தினை, தனது பெயரின் முதலாகக் கொண்ட முதல் பெண், இவள்தான்.

விசுவாசமும், விவேகமும், தரிசனமும், தைரியமும் உடையவளாய், மாபெரும் தலைவனை உருவாக்கி, விசுவாச வீரர்களின் பட்டியலில் இடம் பிடித்து, இன்றளவும் பேசப்படுகிற, வேதம் போற்றும் தாய் இவள்!

**தரிசனமும் தைரியமும் உள்ள தாய்:**

எகிப்திலே இஸ்ரவேல் ஜனங்கள்

அடிமைகளாக – கொடுமையாய் நடத்தப்பட்டார்கள். அவர்களது ஜீவனும் கசப்பாக இருந்தது.

கொடுமையின் உச்சகட்டமாக, பிறக்கும் ஆண் பிள்ளைகளை, நைல் நதியில் போட்டுவிட, பார்வோன் கட்டளையிட்டான். இக்கட்டான சூழ்நிலையில்தான், யோகெபேத் மூன்றாம் முறையாக கருவுற்று, பிரசவத்தை எதிர்நோக்கி இருந்தாள்.

அவளது இதயத்துடிப்பும், இறைவேண்டலும் என்னவாக இருந்திருக்கும்? ஆண் பிள்ளை வேண்டாம் என்று தானே. எந்த தாய் தான் தனது குழந்தையை கொன்று விட சம்மதிப்பாள்!

ஆனால், தேவ திட்டத்தின்படி ஆண் குழந்தை பிறந்தது. யாத்திராகமம் 2:2 மற்றும் எபிரேயர் 11:23 சொல்கிறது, அது அழகான பிள்ளையென்று கண்டு ராஜாவின் கட்டளைக்கு பயப்படாமல் 3 மாதம் ஒளித்து வைத்தார்கள். ஆங்கில வேதாகமத்திலே unusual child, unusually beautiful baby, he was not a ordinary child என்று எழுதப்பட்டுள்ளது.

தங்களது வேண்டுதல்களை அங்கீகரித்து, தேவன் தந்த மகனை உற்று நோக்கும் போது, அது தெய்வீக அழகும், திட்டமும் கொண்ட குழந்தை என்பதை அறிந்து கொண்டாள்.

இந்த பிள்ளையை, தனக்கு இந்த சூழ்நிலையில் தந்ததற்கு தேவனுக்கு ஓர் நோக்கம், தரிசனம் உண்டென்பதை அறிந்து கொண்டாள். உயிரைப் பணயம் வைத்து, தன் குழந்தையை பாதுகாக்க தைரியம் கொண்டாள்.

பெண்கள் சரீரத்தில் பலவீனமானவர்களாக இருந்தாலும், மனதளவில் மிகுந்த வலிமையுடையவர்கள். இக்கட்டான சூழ்நிலைகளிலும் இறுதிவரை நின்று போராடும் குணம் கொண்டவர்கள்.

பிறந்த பச்சிளம் குழந்தையை பராமரிப்பது அவ்வளவு எளிதல்ல என்பது நாம் யாவரும் அறிந்ததே! எப்பொழுது அழும், எப்பொழுது சிரிக்கும்? ஏன் அழுகிறது? அதை எப்படி கையாளுவது? என்பது சற்று சிரமமானதே!

இத்தகைய சூழ்நிலைகளைக் கையாள தனது மற்ற இரண்டு பிள்ளைகளுக்கும் கற்றுக்கொடுத்தாள். ஒவ்வொரு நாளும், மிகுந்த கவனத்தோடும் இறைவேண்டலோடும் கடந்து வந்தாள்.

அவளது முயற்சி பார்வோனுக்கோ, சேவகர்களுக்கோ தெரிய வந்தால், பிறந்த குழந்தை மாத்திரம் அல்ல, அவளது முழுக்குடும்பமும் தண்டனைக்கு தப்ப முடியாது.

3 மாதங்கள் கடந்தன. இனியும் வைத்து பாதுகாப்பது மிகச் சிரமமானது என்பதை உணர்ந்தவளாய், நாணற் பெட்டியை செய்தாள். தண்ணீர் பெட்டிக்குள்ளே புகாதிருக்க, பிசின் மற்றும் கீல் பூசினாள்.

பிள்ளையை உள்ளே வைத்து நதியோரம் நாணலுக்குள்ளே வைத்தாள். அந்தப் பிள்ளைக்கு நடப்பதைக் கண்காணிக்க, தன்னுடைய பெண் பிள்ளையை அங்கே நிறுத்தி வைத்தாள்.

தன்னால் முடிந்தவரை யாவையும் செய்து, தேவனை நம்பியிருந்தாள். அவளது துணிவும், தரிசனமும் தேவனது திட்டம் முழுமை பெற சாத்தியக்கூறுகளாயிற்று.

**விசுவாசமும் விவேகமும் நிறைந்த தாய்:**

எபிரேயர் 11:23 – ல் விசுவாசத்தினாலே மோசேயின் பெற்றோர் ராஜாவினது கட்டளைக்கு பயப்படாமல் அவனை 3 மாதம் ஒளித்து வைத்தார்கள் என்று சான்று பகர்கிறது.

சூழ்நிலைகள் பாதகமாக இருந்தாலும், தேவனை நம்பி, அதை தங்களது கிரியையில் காட்டினார்கள்.

தேவன் யோகெபெத்தின் விசுவாசத்தைக் கனப்படுத்தி, அந்த பிள்ளையை வளர்த்தெடுக்கும் பொறுப்பை அவளிடமே கொடுத்தார்.

இம்முறை பயத்தோடு அல்ல, பார்வோன் குமாரத்தியின் பிள்ளை என்ற அதிகாரத்தோடும், சம்பளத்தோடும், மோசே தன் தாயிடமே வளர்க்கப்பட்டார்.

பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து, அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான். (நீதிமொழிகள் 22:6)

விவேகம் என்றால் புத்திக்கூர்மை, மதிநுட்பம், புத்திசாலித்தனம் என பொருள்படும். தனக்குத் தேவன் கொடுத்த வாய்ப்பினை மிகச் சரியாகப் பயன்படுத்தி, மோசேக்கு அவன் எபிரேயன்–யேகோவா அவர்கள் கடவுள் என்பதைப் பற்றியும் தெரிவித்தார்.

தற்போது அவர்கள் அனுபவித்து வரும் கொடுமைகளைப் பற்றியும், இவையெல்லாவற்றினின்றும் தேவன் அவர்களை நிச்சயம் விடுவிப்பார் என்பதையும், மோசேயின் இதயத்தில் ஆழமாகப் பதித்துவிட்டாள்.

யாத்திராகமம் 2:11-13 மற்றும் எபிரேயர் 11:24-29 வசனம் வரை படிக்கும்போது, யோகெபேத்தின் வளர்ப்பு முறை, மோசேயின் வாழ்வில் கொண்டு வந்த தாக்கத்தை அறிய முடியும்.

விசுவாசமும், விவேகமும், தரிசனமும், தைரியமும் நிறைந்த ஒரு தாய் மாபெரும் இரட்சகனை உருவாக்கி இன்றளவும் நமக்கு சவாலாய் சாட்சி பகர்கிறாள்!

**பிள்ளை வளர்ப்பில் அன்னையரின் பங்கு:**

பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன். சங்கீதம் 127:4. பிள்ளைகள் தேவன் நமக்களிக்கும் பரிசு–வெகுமதி என ஆங்கில வேதாகமம் கூறுகிறது. Children are a gift from God, they are his reward.

ஒவ்வொரு குழந்தையையும் தேவன் ஒரு உன்னத நோக்கத்தோடு (பூமிக்கு) பெற்றோருக்குத் தருகிறார்.

அவர்களை தேவனுக்கு ஏற்றவிதத்திலே அன்பிலும், கீழ்ப்படிதலிலும், விசுவாசத்திலும், பரிசுத்தத்திலும், தனக்கான தேவத்திட்டத்தை அறிந்து செயல்படும் விதத்திலும், வளர்த்தெடுக்க வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு, பெற்றோருக்கு உண்டு.

தந்தையரை விட தாய்மார்களிடம் தேவன் அதிக உத்தரவாதத்தை எதிர்பார்க்கிறார்.

இதை நியாயாதிபதிகள் 13:3-5,9 ஆகிய வசனங்களின் மூலம் அறியலாம். சிம்சோன் மேல் உள்ள தேவ திட்டம் என்னவென்பதையும், அதற்காக கர்ப்பகாலம் தொடங்கி அவள் எப்படி இருக்க வேண்டும்? பிள்ளை பிறந்தவுடன் எப்படி வளர்க்க வேண்டும்? என்ற ஆலோசனையையும் வழங்குகிறார்.

பார்வோனுடைய குமாரத்தி மோசேயின் தாயிடம் "இந்த பிள்ளையை எனக்காக வளர்த்துத் தா" என்று சொன்னது போல, தேவனும் நமக்கு கொடுத்த நமது பிள்ளைகளையும், நம்மை நம்பிக் கொடுத்திருக்கிற நமது ஆவிக்குரிய பிள்ளைகளையும், அவர் விரும்புகிறபடி வளர்த்து, அவர்களது காலத்தில் தேவநாம மகிமைக்காக, அவரது இராஜ்ஜிய விரிவுக்காக, பரிசுத்த பாத்திரங்களாக பரிசுத்தரின் கரத்தில் பயன்பட பரிசளிப்போம்.

## 2026 ஏப்ரல் மாத வேத வினா - விடை போட்டியில் சரியான விடைகள் எழுதியவர்களைப் பாராட்டுகிறோம்.

**மதுரை**
ஞானசிரோன்மணி
டேவிட் ஜெயச்சந்திரன்
மனோகராஜ்
ஷீலா சுரேஷ்
அருள்மொழி ஜான்சன்
வினோதினி
வில்சன்
நளினி
ஜான்சன் எபிநேசர்
ஜெஸி சந்திரதாஸ்
ரஜினி பியூலா ஷோபிகா
ஜான்சி காமராஜ்
பங்கஜம் மார்த்தாண்டம்
ஜெர்லி இம்மானுவேல்
ரெத்னபாய் ஜேசுதாசன்
சுசீலா ஆபிரகாம்
தெல்மா ஸ்டான்லி
சம்பு ஜெயச்சந்திரன்
ஆண்ட்ரூஸ்
பீலோ சாமுவேல்
குளோரி ஸ்டீபன்
கலா செல்வகுமாரி

**கன்னியாகுமரி**
மேரி ஜோசப்
அருளப்பன்
லலிதா நெல்சன்
டேவிட் மனோகர்
மோகன் சி கமலம்
பிரேமா ஜெரால்டு
பிராகரன்ஸ் தங்கராஜா
பமீலா எட்வின்
தேவசகாயம்

**திருநெல்வேலி**
ஜேன் தர்மராஜ்
சுந்தரி ஸ்டீபன்
சந்திரபோஸ்
சந்திரலீலா திரவியம்
செல்வராஜ்
கலா சைமன்
சூரியகுமாரி ஜெயராணி
கஸ்தூரி எலியாஸ்
ஜெபா நியூட்டன்
ரெஜினா சாலமோன்
லில்லி பொன்னுத்தாய் செல்வராஜ்
சந்திரா தாமஸ்
நூர்ஜி
ஹெலன் ரோஸ் ஜீவன்தாஸ்
வயலட் கிறிஸ்டோபர்
பாக்கியம்
ஞானசுந்தரி நாகராஜன்
பத்மா ராஜையா
ரூத் கமலம்
வசந்தா பாலசேகரன்
செல்வி பொன்னரசி
ஜோதிமாலா மனுவேல்
கிளாடிஸ் ராஜையா
பெட்ரிசியா ஜஸ்டஸ்
ஜாஸ்மின் சாம்சன்
வில்லியம் பிரடெரிக்
ரூத் ஜெயராணிஅன்புராஜ்
ஜான்சி ராணி
குயின் கூவான்
ஜெனிபர் சில்வியா
ஜெயசிங்
பிரின்சஸ் சுரேந்திரநாத்
சாந்தி ராஜன்

**தென்காசி**
செல்வி ஜேக்கப்

**தூத்துக்குடி**
தேவகிருபை
அன்னத்தாய் ஆல்பர்ட்
லீலா டேவிட்சன்
ஜோதிமணி வில்சன்
ஆலீஸ் குணசீலி
குளோரி செல்வராஜ்
ஸ்டான்லி ராஜாமணி
கிருபாசனம் ரெமீஜியஸ்
சுகிர்தவல்லி பொன்னுசாமி
ஹெலன் திலக்
ரூபவல்யா
ரெத்னாவதி முத்துராஜ்
பாக்கியராஜ்
சேசம்மாள் தேவசகாயம்
சாந்தகுமாரி
ஞானமணி ஹெப்சிபா
ஆனி இன்பநாயகம்
புஷ்பராணி ஜேம்ஸ்
ஷேபா கோயில்பிச்சை
ரேச்சல் எட்வர்ட்
ஆதிசிரோன்மணி
ஞானதீபம்
ரெத்னாம்பாள் ஈஸ்டர்ராஜ்
சந்திரா
ஜாய்ஸ் ஜான்சன்
தியாகராஜன்

**சென்னை**
ஜெயமேரி சந்திரசேகரன்
செலின்ராணி டேவிட்
ராபின் தாமஸ்
சாந்தி டென்னிசன்
மடோனா
பெர்ணாண்டோ
டேவிட் ஜெயகுமார்
யூனிஸ் ரிச்சர்ட்
கரோலின் ராஜகுமாரி
கிரேஸ் தங்கதுரை
ஹில்டா எலிசபெத்
ராஜா
ரோஹிணி ஜேசன்

**திருச்சி**
டேவிட்
ஜெபமணி டேவிட்
சூசன்னா
ராணி
திலீப்குமார்
ஜெபசீலி ஜெயகொடி
சிசிலியா ஜெயபிரகாஷ்
வில்லியன் ஜோசப்
தேவகிருபை
டிக்ஸி ஆல்பர்ட்

**கோயம்புத்தூர்**
ஜான்சி
கிறிஸ்டிபாய் வாசன்
அருணோதயம் வில்லியம்
தனபால் சின்னகண்ணு

**தேனி**
எலிசபெத் பால்ராஜ்
பொன்ராணி அன்புநாதன்
சுசீலா ஜான்
ஜாய்ஸ் தேவராஜ்
மாலா வில்சன்
செல்வ விலாசினி டேவிட்

**புதுக்கோட்டை**
சாந்தி வில்லியம்

**தஞ்சாவூர்**
ஜோசப்பின் செல்லத்தாய்
ரோஸலின் செல்வராணி
சாந்தி குணசேகரன்
பிரமீளா செல்வம்
குணசீலி ஸ்டீபன்

**சிவகங்கை**
பாலின் மார்டின்
லலிதா பெவின்சன்

**ஈரோடு**
ரூத் நேசமணி
இமாகுலேட் விக்டர் பாபு
பென்னி

**பெங்களூரு**
டாரத்தி சாந்தகுமாரி
பால்ராஜ்
சில்வியா ராஜகுமாரி
லதா கிரேஸ்

**நீலகிரி**
சோபியா நரேந்திரன்
ஸ்வீட்டி மைக்கேல்

**சேலம்**
இவாஞ்சலின் ஜோன்ஸ்
ரோலண்ட் அருள்ராஜ்
அனிதா குமாரி
பழனியம்மாள் சாமிநாதன்

**திருப்பூர்**
கனகசத்தியவதி

**விருதுநகர்**
பொன்னுத்தாய் ராஜேந்திரன்
பிளாரன்ஸ் ராஜமோகன்
ஆல்பர்ட் ஜேம்ஸ்
லீலாவதி பால்சிங்

**திண்டுக்கல்**
கெத்ஸி எலிசபெத்
குளோரி மனோகர்
அகஸ்டி ராபர்ட்
பால் சின்னதம்பி
லிசா இம்மானுவேல்

**வேலூர்**
மெர்ஸி புளோரா

**திருவண்ணாமலை**
திரவியம்

**இராமநாதபுரம்**
ஸ்டெல்லா வசந்தகுமாரி

**கடலூர்**
செல்லபாய்

# வேத வினாக்கள்
## மே - 2026
### (2 கொரிந்தியர்: 1 முதல் 7 அதிகாரங்கள் வரை)

**பொருத்துக**

1. பரிசுத்தம் - திராணி
2. கிறிஸ்து - துப்புரவாக
3. ஆறுதல் - அச்சாரம்
4. ஆவி - பேலியாள்
5. கலப்பாய் - தேவ பயம்

**கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. எங்களுக்கு ..... நாங்கள் ஒருவனுக்கும் ..... ஒருவனையும் ..... ஒருவனையும் .....
2. நாம் அவருக்குள் ..... நீதியாகும்படிக்கு ..... அறியாத அவரை நமக்காகப் .....
3. இப்படி ..... எங்களிடத்திலும் ..... உங்களிடத்திலும் ..... செய்கிறது.
4. ..... கொடுக்கும் ..... மகிமையுள்ளதாயிருந்தால் ..... ஊழியம் ..... யுள்ளதாயிருக்குமே.
5. ..... நாம் மோசம் போகாதபடிக்கு அப்படிச் செய்தேன். அவனுடைய ..... நமக்குத் ..... அல்லவே.

**விடை எழுதுக**

1. லௌகீக துக்கம் எதை உண்டாக்குகிறது?
2. ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் எப்படி இருக்கிறான்?
3. கொரிந்தியர் இரண்டாம் நிருபம் பவுல் தீமோத்தேயுவினால் யாருக்கு எழுதப்பட்டது?
4. கிறிஸ்துவின் நற்கந்தமாக யாருக்கெல்லாம் இருப்பதாக பவுல் கூறுகிறார்?
5. எங்கே விடுதலையுண்டு என்று பவுல் கூறுகிறார்?

தொகுப்பு: Mrs. மெர்ஸி கிறிஸ்டோபர், சென்னை.

- விடைகளுடன், வேத ஆதாரங்களையும் எழுதுங்கள்.
- விடைகளை அஞ்சல் அட்டையில் எழுதக்கூடாது.
- வினா எண்ணைக் குறிப்பிட்டு, பதில்களை மட்டும் எழுதுங்கள்.
- வளரும் விண்ணரசு இதழின் சந்தா எண் மற்றும் அலைபேசி எண்ணுடன், உங்கள் **முழு முகவரியையும்** எழுதுங்கள்.
- சரியான விடை எழுதியவர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**உங்களது விடைகள் எங்களுக்கு வந்துசேர கடைசி நாள் இம்மாதம் 20ஆம் தேதி**

**வேதவினா விடை,**
வளரும் விண்ணரசு,
58/1, முத்தாலம்மன் கோவில் தெரு,
சேலையூர், சென்னை – 600 073.
9003916480

**ஏப்ரல் மாத வேதவினா–விடை போட்டியில் பரிசு பெற்றவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறோம்!**



1. திரு. ஆல்பர்ட் ஜேம்ஸ் – விருதுநகர்
2. திரு. ராபின் தாமஸ் – சென்னை
3. திருமதி. செல்வ விலாசினி டேவிட் – தேனி

# நடப்புச் செய்திகள்

**வாஷிங்டன்**: மேற்கு ஆசியப் போர்ச்சூழல் உலகப் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள நிலையிலும், 2026 மற்றும் 2027-ம் ஆண்டுகளில் உலகின் மிக வேகமாக வளரும் முக்கியப் பொருளாதார நாடாக இந்தியா தொடர்ந்து நீடிக்கும் என்று சர்வதேச நாணய நிதியம் (ஐஎம்எஃப்) கணித்துள்ளது. ஐஎம்எஃப்-ன் உலகப் பொருளாதாரக் கண்ணோட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: இந்தியாவின் வளர்ச்சி விகிதம் 2026 மற்றும் 2027-ம் ஆண்டுகளில் தலா 6.5 சதவீதமாக இருக்கும். மேற்கு ஆசியப் பிராந்தியத்தில் நிலவும் போர்ச் சூழலால் சர்வதேச சந்தைகளும் விநியோகச் சங்கிலியும் கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. இதன் விளைவாக, உலகப் பொருளாதார வளர்ச்சி குறித்த முந்தைய மதிப்பீடு குறைக்கப்பட்டுள்ளது. அதன்படி, கடந்த ஜனவரி மாதம் 3.3% ஆக இருக்கும் எனக் கணிக்கப்பட்ட உலகப் பொருளாதார வளர்ச்சி, தற்போது 3.1 சதவீதமாகக் குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது. உலக அளவில் நிலவும் எரிசக்தி மற்றும் உணவுப் பொருட்கள் விலை உயர்வால், இந்தியாவில் பணவீக்கம் 2026-ல் 4.7 சதவீதமாக உயரக்கூடும். பின்னர் 2027-ல் இது 4 சதவீதமாகக் குறையும். 2025-ம் ஆண்டுக்கான இந்தியாவின் வளர்ச்சி மதிப்பீடு 7.6% ஆக இருக்கும். இது கடந்த அக்டோபர் மாத கணிப்பை விட ஒரு சதவீதம் அதிகமாகும். மேற்கு ஆசியாவில் அமெரிக்கா - ஈரான் இடையிலான தற்காலிகப் போர்நிறுத்தம் இன்னும் ஒரு நிரந்தர அமைதி உடன்படிக்கைக்கு வரவில்லை. இந்தப் போர் மேலும் தீவிரமடைந்தால், உலகப் பொருளாதார வளர்ச்சி 2026-ல் 2 சதவீதம் வரை வீழ்ச்சியடையும் அபாயம் உள்ளது. எரிசக்தி உள்கட்டமைப்புகள் சேதமடைந்தால் பாதிப்பு இன்னும் கடுமையாக இருக்கும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**புதுடெல்லி**: கடந்த 2021 ஏப்ரல் முதல் 2025 நவம்பர் வரை நாடு முழுவதும் டிஜிட்டல் கைது உட்பட சைபர் மோசடியால் பொதுமக்கள் ரூ.54,000 கோடியை இழந்துள்ளனர். இந்த மோசடியைத் தடுக்க சிபிஐ சார்பில் அபய் என்ற பெயரில் 'சாட்பாட்' வசதி தொடங்கப்படவுள்ளது. இதுகுறித்து சிபிஐ வட்டாரங்கள் கூறியதாவது: சிபிஐ அமைப்பின் சாட்பாட் மூலம் பொதுமக்கள் தரப்பில் எழுப்பப்படும் சந்தேகங்களுக்கு தெளிவான பதில் அளிக்கப்படும். உதாரணமாக மர்ம நபர், யாரையாவது டிஜிட்டல் கைது செய்திருப்பதாக மொபைல் போனில் மிரட்டல் விடுத்தால், உடனடியாக அபய் சாட்பாட் வசதியை பயன்படுத்தலாம். மர்ம நபர் ஏதாவது ஒரு விவகாரத்தைக் கூறி மிரட்டல் விடுப்பது வழக்கம். அது குறித்து சாட்பாட்டில் கேள்வி எழுப்பி தெளிவான விளக்கத்தைப் பெறலாம். உச்ச நீதிமன்ற அறிவுறுத்தலின்படி சாட்பாட் வசதியை தொடங்குகிறோம். இவ்வாறு சிபிஐ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

**புதுடெல்லி**: மேற்கு ஆசிய போரால் எரிசக்தி விநியோகம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் பயோ காஸ் மற்றும் சூரிய மின்சக்தி திட்டங்களில் இந்திய ராணுவம் தீவிர கவனம் செலுத்தி வருகிறது. இதுகுறித்து மூத்த ராணுவ அதிகாரிகள் கூறியதாவது: சமையலுக்கு தேவையான மாற்று எரிசக்தி ஆதாரங்களை நோக்கி ராணுவம் விரைவாக நகர்ந்து வருகிறது. பயோ காஸ் அடுப்புகளை கொள்முதல் செய்வதற்கான உத்தரவுகள் ஏற்கெனவே தயார் நிலையில் உள்ளன. ராணுவம் முழுவதிலும் தினமும் சுமார் 1,56,000 கிலோ சமையல் எரிவாயு பயன்படுத்தப்படுகிறது. இதில் சுமார் 20%, அதாவது நாளொன்றுக்கு சுமார் 30,000 கிலோ சமையல் எரிவாயுவை பயோ காஸ் மூலம் மட்டுமே சேமிக்க முடியும். தற்போது ஒவ்வொரு வீரருக்கும் சமையலுக்காக நாள் ஒன்றுக்கு 125- 135 கிராம் எரிவாயு ஒதுக்கப்படுகிறது. இது தவிர, நிர்வாக, செயல்பாடு மற்றும் பயிற்சி நோக்கங்களுக்காக 2 லட்சத்துக்கும் அதிகமான பல்வேறு வகை வாகனங்களை ராணுவம் இயக்குகிறது. இதனால் தினமும் பெருமளவு எரிபொருள் நுகர்வு ஏற்படுகிறது. இந்த சுமையைக் குறைக்க, நிர்வாக ரீதியான ராணுவப் படைகளின் பயணத்தை 400 கி.மீ தூரமாக கட்டுப்படுத்தலாமா என்றும், அதற்கு மேற்பட்ட தூரத்துக்கு ரயில் போக்குவரத்தை அதிகபட்சமாக பயன்படுத்தலாமா என்றும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. வாகனங்களைப் பகிர்ந்துகொள்வது, உணவுப் பொருட்கள் சேகரிப்பு மற்றும் படை வீரர்களை ஏற்றிச் செல்லுதல் போன்ற பணிகளை ஒருங்கிணைப்பதும் பரிசீலனையில் உள்ளது. சாத்தியமான இடங்களில் சிஎன்ஜி அல்லது வாடகை மின்சார வாகனங்களைப் பயன்படுத்துவது ஊக்குவிக்கப்படும். இவ்வாறு ராணுவ அதிகாரிகள் கூறினர். சூரிய மற்றும் பயோ காஸ் ஆலைகளுக்காக சுமார் 46,000 ஏக்கர் பாதுகாப்புத் துறை நிலத்தைப் பயன்படுத்த ஆயுதப் படைகள் திட்டமிட்டுள்ளதாக கடந்த ஆண்டு டிசம்பரில் செய்தி வெளியானது குறிப்பிடத்தக்கது.

நன்றி: தி இந்து தமிழ் திசை (16,20,21/04/2026)

# இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன்

58/1முத்தாலம்மன் கோவில் தெரு, சேலையூர், சென்னை-73

94459 24440 email: contacticgm@gmail.com


## அருட்பணியாளர்களின் குழந்தைகள் கல்வி நிதிக்காக...

மே 2026.

கிறிஸ்துவுக்குள் அன்பான ஊழியப் பங்காளர்களுக்கு,

நம் ஆண்டவர் இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!

தேவனுடைய கிருபையினால், நம் ஆண்டவர் ஒவ்வொரு ஆண்டும் உங்களைப் போன்ற கொடுப்பவர்களை எழுப்பி, இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷனின் (ICGM) 75 மிஷனரி பிள்ளைகளின் கல்வித் தேவைகளை சந்தித்து வருகிறார். உங்களது தொடர்ந்த ஆதரவுக்கும் தாராள மனதுக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகள்.

கடந்த ஆண்டுகளைப் போலவே, இந்த ஆண்டும் இந்த தேவையைத் தாழ்மையுடன் உங்கள் முன் வைக்கிறோம். கல்விச் செலவுகள் மிகவும் அதிகரித்துள்ளதால், பள்ளி-கல்லூரிக் கட்டணம், புத்தகங்கள் மற்றும் பிற அவசியமான கல்வி உபகரணங்களுக்கான செலவுகள் மிஷனரி பெற்றோருக்கு மிகவும் சவாலானவைகளாக இருக்கின்றன.

இந்த பிள்ளைகளுக்கான உங்கள் அன்பான உதவி, அவர்களின் எதிர்காலத்திற்கான முதலீடாக மட்டுமல்லாமல், மிஷனரிப்பணியில் நீங்கள் பங்கெடுப்பதையும் காட்டுகிறது. நிச்சயமாக, உங்கள் மனமுவந்த பங்களிப்பிற்காக ஆண்டவர் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பார்.

எழுதியிருக்கிறபடி, "பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்". (2 கொரிந்தியர் 9:6)

இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷனின் (ICGM), மிஷனரி பிள்ளைகளுக்கான உங்கள் ஆதரவை, தொடர்ந்து அளிக்குமாறு, அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தேவன் உங்களை அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக!

நன்றியுடன்,

கிறிஸ்துவின் பணியில்.

அருள்திரு.சா. டேவிட் சாலமோன்,

பொதுச்சேவகர்

உங்களுடைய விருப்பத்தைத் தேர்வு செய்து இந்தத் தேவையைச் சந்திக்க வாருங்கள்.

| | |
|---|---|
| ₹1000 ☐ | ₹2000 ☐ |
| ₹5000 ☐ | ₹10000 ☐ |

**நம்முடைய மொத்தத்தேவை ரூ.16.00 இலட்சமாகும்**

| | |
|---|---|
| Account Name | INDIA CHURCH GROWTH MISSION |
| Account Number | 10143136773 |
| Bank | State Bank of India |
| Branch Name | Selaiyur, Chennai- 600073 |
| IFSC Code | SBIN0007948 |

icgm1014@sbi

ICGM

ஆன்லைனில் காணிக்கை அனுப்புபவர்கள் மேலே உள்ள வங்கிக்கணக்கிற்கு அனுப்பி 94459 24440 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தி (SMS/Whatspp) அனுப்பவும். உங்களுக்கு இரசீது அனுப்ப உதவியாயிருக்கும்

**Registered with RNI Under No:TNTAM/2000/01585**

**Postal Registration No: TN/MA/42/2024-2026 WPP No: TN/WPP-20/SR/2024-2026**

**Posted at BPC Madurai - 625 001.**

**Date of publishing: 27th April 2026** **Date of posting - 28th,29th and 30th April 2026.**

Printed by Mr.S.Ghunashekaren and Published by Mrs. Selva Dani Chandra Dhas on behalf of Irai Arasu Trust and printed at Sharon Print System, No:51/7, Ahimsapuram First Street, Extension, Near Saraswathi Theater, Sellur, Madurai-625002 and Published at 3/211. Nagamalai Pudur, Palkalai Nagar, Madurai-625021, Editor Mr.G. Ponnuraj.

## பொதுச்சேவகரிடமிருந்து தொடர்ச்சி...

இத்திருச்சபையின் போதகர் **Rev.**யோவேல் செல்வகுமார் அவர்களுக்கு நன்றி.

மதுரை மாவட்டம்–இந்திராநகரிலுள்ள ஆலயத்தை மறுசீரமைப்பதற்காக, கடந்த 5 ஆண்டுகளாக ஜெபித்து வந்தோம். தற்போது, மதுரையிலுள்ள திரு.கிளமென்ட் குடும்பத்தினர், இவ்வாலயத்தை மறுசீரமைக்கும் பணிக்கு உதவ முன்வந்துள்ளனர். இதற்காக தேவனைத் துதிக்கிறேன்.

கள்ளக்குறிச்சி மாவட்டம்– கல்வராயன் மலையில் ஆலயக்கட்டுமானப்பணி விரைவாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தக் கட்டுமானப்பணிக்கு உதவிய ஒவ்வொருவருக்கும் நன்றி.

சத்தீஷ்கர் மாநிலத்தில், சிவ்னி, குருஸ்நார், டாடோனார் ஆகிய கிராமங்களில் ஆலயக்கட்டுமானப்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

வருகிற கல்வியாண்டில், நமது அருட்பணியாளர்களது குழந்தைகளின் கல்வி நிதிக்காக, உங்களுடைய உதாரத்துவமான காணிக்கைகளை அனுப்பி வைக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தேவகிருபை உங்களோடிருப்பதாக.

கிறிஸ்துவின் சீடராக்கும் பணியில்,
**அருள்திரு.சா. டேவிட் சாலமோன்,**
பொதுச்சேவகர்.

**If undelivered, please return to:**

**Valarum Vinnarasu, No.58/1. Muthalamman Koil Street, Selaiyur, Chennai - 600 073. Tamilnadu.**
**Cell : 94459 24440**

icgm1014@sbi

ICGM

**To:**